விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை (11.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328




# யுத்த நிறுத்தத்துக்கு இடமில்லை

# அடித்துக் கூறுகிறது அரசாங்கம்

## ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே பேச்சாம்

(கொழும்பு)

அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளுடன் எந்தவித இணக்கப்பாட்டினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு தயாராக இல்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஷ்ட அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் வரையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குச் செல்லாது என ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும் அவர் சொன்னார். (14ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியை மீட்கும் நிலைக்கு இராணுவம் முன்னேற்றம்

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதித் தடையையும் தாண்டி பூநகரியை மீட்கும் நிலைக்கு இலங்கை இராணுவத்தினர் சென்றிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வன்னி முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருவதுடன், பூநகரியை மீட்பதற்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர் கருணாநிதியின் தவறுகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு எதிரான கருணாநிதியின் தவறுகளை வரலாறு மன்னிக்காது என்று தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் 'ஈழத்தமிழர் சிக்கலும் இந்தியாவும்' என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன் கலந்து கொண்டு பேசியதாவது,

காங்கிரஸ் வரலாறு தெரியாத தங்கபாலு, பிரணாப் முகர்ஜி போன்றவர்கள் இலங்கை உள்நாட்டுப் போரில் இந்தியா தலையிட முடியாது என்று (14ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி 20 வருடங்களுக்கு இருக்கும்

### அமைச்சர் மகிந்தானந்த நம்பிக்கை

(கொழும்பு)


இன்னும் 20 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஆட்சியில் இருப்பார் எனவும் ராஜபக்ஷ ஆட்சியை எவராலும் கவிழ்க்க முடியாது எனவும் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட யோசனைகளின் மீள் வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்னுமொரு வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து ராஜபக்ஷ அரசாங்கத்தை தொடர்ச்சியாக தக்க வைத்துக்கொள்ள உரிய நடவடிக்கை (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போர் நிறுத்தம்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கலைஞர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்தல்




(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட அந்த நாட்டு அரசை வற்புறுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதல்வர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை வருமாறு,

இலங்கையில் போர் நிறுத்தம் இரு சாராரும் கடைப்பிடிக்கவேண்டியது எனக் கூறியிருந்தேன். இந்நிலையில் போர் நிறுத்தத்திற்குத் தயார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே இந்திய அரசு நினைத்தால் ஒரே நாளில் இலங்கையில் நடக்கும் சண்டையை (14ஆம் பக்கம் பார்க்க)



## நாடாளுமன்ற வீதியிலிருந்து வெடிகுண்டு மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை நாடாளுமன்ற வீதியிலிருந்து வெடிகுண்டு ஒன்றை பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர்.

இப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இந்தக் குண்டை மீட்டனர்.

இது தொடர்பில் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மீட்கப்பட்ட குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது.

இப்பகுதியினூடாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் நாடாளுமன்றத்துக்கு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இந்.பிரதமர் மற்றும் சோனியாவை மகிந்த சந்தித்துப் பேச ஏற்பாடு

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெறும் வங்காள விரிகுடா நாடுகளின் மாநாட்டில் பங்கெடுப்பதற்காக புதுடில்லி செல்லும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இலங்கையின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து, பூட்டான், நேபாளம், இலங்கை ஆகிய பிராந்திய நாடுகள் பங்குபற்றும் வங்காள விரிகுடா நாடுகளின் தலைவர்கள் மாநாடு இன்றும் நாளையும் புதுடில்லியில் நடைபெறுகிறது.

தெற்காசியாவுக்கும், தென்கிழக்கு ஆசியாவுக்கும் (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகள் இடம் பெறாத நிலையே போர்நிறுத்தம்

### விளக்குகிறார் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

வன்முறைகள் இடம் பெறாத நிலையையே போர்நிறுத்தம் என அழைக்கப்படும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலே எந்தவொரு போர்நிறுத்தமும் சாத்தியப்படும்.

போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கத் தயார். ஆயினும் இலங்கை அரசாங்கம் விதித்திருக்கும் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்ற (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வண.பிதாக்களுக்கு புதிய நியமனங்கள்

யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் வண. பிதாக்களுக்கு புதிய நியமனங்களுக்கும் பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மறை மாவட்ட மறைக் கல்வி நடு நிலையத்தின் புதிய இயக்குநராக அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளார் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பேராலய பங்குத் தந்தையாக அருட்பணி ஆர்.எச்.சகாயநாயகமும் குருநகர் பங்குத் தந்தையாக அருட்பணி ஆர். சி.எஸ். நேசராஜாவும் ஆனைக்கோட்டைப் பங்குத் தந்தையாக அருட்பணி ஜே.ஜேண் பவுலிஸ்ஸும் உரும்பிராய் பங்குத் தந்தையாக அருட்பணி யுட்.நிக்சனும் சில்லாலை பங்குத் தந்தையாக அருட்பணி யூட் அமலதாஸும்,

சாவகச்சேரி பங்குத் தந்தையாக அருட்பணி எம்.எல்.தயாகரனும் மிருசுவில் பங்குத் தந்தையாக அருட்பணி ஜே.பி. சோதிநாதனும் புங்குடுதீவுப் பங்குத் தந்தையாக அருட்பணி எஸ்.லியோ ஆம்ஸ்ரோங்கும் இரணைப்பாலை பங்குத் தந்தையாக அருட்பணி பிராயனும் புதுக்குடியிருப்பு உதவி பங்குத் தந்தையாக அருட்பணி பி. யுட்தாஸ் ஆகியோர் யாழ்.ஆயரினால் நியமிக்கப்பட்டுத் தமது பொறுப்புக்களை பொறுப்பேற்றுள்ளனர். (எ-1)

# பேருந்துக் கட்டணம் இன்று முதல் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை இன்றுமுதல் பேருந்துக் கட்டணங்களைக் குறைக்கவுள்ளது. இது தொடர்பாக வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பிரதேச முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்ட கட்டணக் குறைப்பு வருமாறு,

| முன்னைய பேருந்துக் கட்டணம் | தற்போதைய பேருந்துக் கட்டணம் | முன்னைய பேருந்துக் கட்டணம் | தற்போதைய பேருந்துக் கட்டணம் |
|---|---|---|---|
| 6.00 | 6.00 | 52.00 | 49.00 |
| 9.00 | 9.00 | 55.00 | 53.00 |
| 12.00 | 12.00 | 59.00 | 56.00 |
| 16.00 | 15.00 | 62.00 | 59.00 |
| 18.00 | 18.00 | 64.00 | 61.00 |
| 21.00 | 20.00 | 66.00 | 63.00 |
| 24.00 | 23.00 | 69.00 | 66.00 |
| 26.00 | 25.00 | 72.00 | 69.00 |
| 30.00 | 28.00 | 76.00. | 72.00 |
| 34.00 | 32.00 | 79.00 | 76.00 |
| 37.00 | 35.00 | 82.00 | 79.00 |
| 40.00 | 38.00 | 86.00 | 82.00 |
| 42.00 | 40.00 | 87.00 | 84.00 |
| 44.00 | 41.00 | 92.00 | 89.00 |
| 45.00 | 43.00 | 96.00 | 91.00 |
| 49.00 | 46.00 | 99.00 | 94.00 |
| 50.00 | 47.00 | 103.00 | 98.00 |

# மீனவர்களைத் தாக்கவில்லை இலங்கைத் தூதரகம் பதில்

(சென்னை)

இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லையென இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் நாகபட்டினம் மீனவர்கள் மீது கோடிக்கரைப் பகுதியில் இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், இந்தச் சம்பவத்தில் நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த இரு மீனவர்கள் காயமடைந்திருப்பதாகவும் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும், இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மையில்லையென சென்னையிலுள்ள பிரதி உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் காங்கேசன்துறை துறைமுகம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதுடன், மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை எனப் பிரதி உயர்ஸ்தானிகராலயத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# சுகாதார சேவைக்கு மேலும் 4 ஆயிரம் தாதிமார்

(கொழும்பு)

சுகாதார சேவைக்கு மேலும் 4 ஆயிரம் தாதிமார் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அம்பாறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய தாதிமார் பயிற்சிப் பாடசாலையின் திறப்பு விழா நிகழ்ச்சிக்காகக் கொழும்பிலிருந்து செய்ம்மதி மூலமாக உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையான தாதிமாருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வெளிநாடுகளில் உள்ள வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# திருமலையில் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 'இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை-பன்குளம் பிரதான வீதியில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் அணி மீது கடந்த சனிக்கிழமை காலை 6.10 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)


# தவறிவிட்டது

ஜெயராசா பூமதி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (725723148V) யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தொலைந்து விட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

**தம்பி தேநீர்ச்சாலை,**
இல.18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C-1777)

| | | | |
|---|---|---|---|
| 42.00 | 40.00 | 87.00 | 84.00 |
| 44.00 | 41.00 | 92.00 | 89.00 |
| 45.00 | 43.00 | 96.00 | 91.00 |
| 49.00 | 46.00 | 99.00 | 94.00 |
| 50.00 | 47.00 | 103.00 | 98.00 |

ளில் உள்ள வைத்தியசாலைகளில் சேவை யாற்றுவதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

தம்பி தேநீர்ச்சாலை,
இல.18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C-1777)

# HNB சுன்னாகம்

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு"

## மாற்று வலுவுள்ளோரின் மனங்களில்



நாம் எப்போது சென்றாலும் எத்தனை தடவைகள் சென்றாலும் இன் முகத்தோடு வரவேற்றுக் கணநேரம்கூட எம்மைக் காக்கவைக்காமல் நொடிப் பொழுதில் கச்சிதமாய் எமது வேலைகளை முடித்துத் தருகின்ற இவ்வங்கியினரின் உயர் சேவையினை ஒருபோதும் நாம் மறக்க முடியாது. இவ்வங்கியின் ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் எமது நிறுவனத்துக்கு உதவி வழங்குவதோடு எமக்கு உதவக்கூடிய நண்பர்கள், உறவினர்களுக்கு வாழ்வகத்தினை அறிமுகப்படுத்தி அருந்தொண்டாற்றி வருவதையும் இவ்விடத்தில் நன்றியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

திரு.ஆ.ரவீந்திரன் தலைவர், வாழ்வகம் சுன்னாகம்.

## உயர்கல்விக்கான கடன் மூலமும் ஷாந்தி வீடமைப்புக்கடன் மூலமும் பயன்பெற்ற அரசஊழியர்கள் நோக்கில்



காலத்தின் கோலமதைக்
கண்ணிய மாய்க் கண்டறிந்தே!
பலமான பாலமதை
பக்குவமாய்ப் பகுத்துணர்ந்தே!
உயர்கல்வி ஊத்தினிலே
ஊன்று கோலாய்ச் சேவைதனில்!
காணிக்கைக் கரங்கொண்ட
ஹற்றன் நேஷனல் வங்கிதனின்!
கோர்வை கொண்ட சேவைகளின்
பார்வைகளில் ஆர்வம் கொள்வோம்!

திருமதி மங்களகௌரி தயாளநேசன் (அதிபர்)
யா/கொக்குவில் மேற்கு, சி.சி.த.க.பாடசாலை

## வணிகப் பெருமகனின் நம்பிக்கை



கடந்தகால, தற்கால யுத்தசூழ்நிலையிலும் கூட இவ் வங்கியானது வியாபாரிகள், விவசாயிகள், மற்றும் முதலீட்டாளர்களையும் உள்ளடக்கித் தேவையான கடன்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி மக்களின் சுபீட்சமான எதிர்கால நல்வாழ்வுக்கு உதவிக்கரம் நீட்டும் நண்பன் நிச்சயமாக இந்த ஹற்றன் நஷனல் வங்கியாக த்தான் இருக்கும் என நம்புகின்றேன்.

திரு.சி.சுந்தரேஸ்வரன்
ஜெயகிருஷ்ணா ஹாட்வெயர், சுன்னாகம்.

## தொழில் முயற்சியாளனின் தொனிப்பு

எமது நிறுவனம் முதன்மையாக திகழ எமது தொழில்நுட்பம் முதன்மையானது எமது தொழில்நுட்ப மறுமலர்ச்சிக்கு HNB சுன்னாகத்தின் பங்கு காத்திரமானது.


கரிகணன், யாழ்ப்பாணம்.

## தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் பார்வையில்



சாதாரண ஏழை பாட்டாளி வர்க்கத்தினர் வங்கி நடைமுறையில் பங்குபற்றும் வகையில் கிராமமட்டத்திற்கு இறங்கி, வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தி ஒத்த எண்ணக்கருக்களை உடையவர்களை குழுக்களாக்கி விவசாயக்கடன், வியாபாரக்கடன், சுயமுயற்சிக்கடன், சிறுகைத்தொழிற்கடன் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்குத் தனி நுண்நிதி அலகு செயற்பட்டு வருகின்றது.

திரு.நடுநாயகமூர்த்தி
திட்ட இணைப்பாளர், FORUT




11.11.2008 செவ்வாய்கிழமை
இன்று காலை முற்பகல்
10.41 மணியளவில்
வரும் சுபவேளையில்
நடைபெறும் எமது
புதிய கட்டட திறப்புவிழாவில்
அனைவரையும் கலந்து
கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்.

HNB
சுன்னாகம்.

## கல்விப் புலம் சார்பில்



குறிப்பாக பின்தங்கிய பாடசாலைகளில், வங்கி அலகை ஆரம்பித்துப் பல ஏழை மக்களிற்குச் சேமிப்பு ஊக்கத்தையும் ஏற்படுத்தி "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற முன்னோர் சொல்லிற்கேற்ப மேற்கொள்வதுடன் அவர்களிற்கு ஊக்குவிப்புப் பரிசை வழங்குவதும் சிறப்பானதாகும். அத்துடன் துரித இலகு கடன்திட்டம், வீட்டுக்கடன்திட்டம் என்பவற்றை வழங்கி வருகின்றது.

திரு.எஸ்.திரிகரன்
அதிபர், யா/ஊரெழு கணேசாவித்தியாசாலை.

## உழைப்பாளிகளின் உள்ளக்கிடக்கை



கடன்தந்துதவினார்கள் அதனால் காணிக்கு சொந்தக்காரனாகவும், நிரந்தரமாக, சொந்தமாக, ஒருதொழிலைச் செய்து வருகின்றேன்.

திரு.க.தனகுமார் இணுவில்

## பிரமுகர்களின் பார்வையில்



இவ்வங்கி நிதிநிறுவனமாக மட்டுமன்றி சமுதாய மறுமலர்ச்சிக்குரிய பங்களிப்பினை இயன்ற வரை ஆற்றி வருவது பாராட்டுக்குரியது. எங்கள் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான நூல்நிலையத்தை மிகச்சிறப்பாக உருவாக்கியதுடன் அதனைக் காலந்தோறும் நேசித்து வரும் பணி மெச்சத்தக்கது. சுனாமி அனர்த்தகாலத்தில் அபயக்கரங்களாகச் செயற்பட்டதுடன் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக, மாணவர்களுக்கு உதவுவதற்கு சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து ஆற்றிய பணி நன்றிக்குரியது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

## விவசாயக்கடன் மூலம் பயன்பெற்ற வேளாண் பெருமக்கள் சார்பில்



இடர்சூழ்ந்த காலப்பகுதியில் விவசாயிகள் இலகுவான முறையில் குறைந்த வட்டியில் கடன்பெறவும், பணத்தைச் சேமிக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வங்கி நடைமுறைப்படுத்தும் திட்டங்களும் என மக்கள் பல நன்மைகளை அடைகின்றார்கள்.

திரு.சி.திருக்குமார்
உபதலைவர், இணுவில் விவசாய சம்மேளனம்.


## வறுமை ஒழிப்பு நுண்கருத்திட்டப் பயனாளியின் இதயம்பேசுகிறது



கையால் நீர் இறைப்பதை கண்ட வங்கி அங்கத்தவர்கள் 20000/= கடனுதவித் திட்டத்தை எனக்கு வழங்கினர். அதனை முறையாக மீள்ச்செலுத்தியதால் 50000/= ரூபாவை கடனாகத் தந்தார்கள். அத்தொகையை பயன்படுத்தி எருது மாடுகளை வாங்கி எனது நீண்டநாள் ஆசையை நிறைவேற்றினேன்.

திருமதி.சு.சரோயினிதேவி
அராலி வறுமை ஒழிப்புத் திட்டக்குழு.

## தனிநபர் கடன் மூலம் அவசர நிதித்தேவையை நிறைவு செய்த உள்ளத்தின் உறுதிமொழி



இந்த வங்கி நவீன வசதியுடன் சுன்னாகத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கடன்உதவிகள், சேவைகள் பலவற்றைசெய்துவருகின்றது.

திரு.தே.ஹரிசஞ்சீவன் சங்குவேலி.

# இன்று ஒரு தகவல்

## நன்மையும் தீமையும்

ஒருவர் நமக்கு நன்மை செய்கிறார் என்றால் அதை நாம் நீண்ட நாட்களுக்கு நினைத்துப் பார்ப்பதில்லை.

ஆனால் அவரே நமக்கு ஒரு தீமை செய்கிறார் என்றால் அதை அவ்வளவு சுலபமாக மறந்துவிட மாட்டோம். எப்பொழுது பழிவாங்கலாம் என்று காத்துக்கொண்டிருப்போம்.

இதை விளக்க சுவாமி சிவானந்தர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு கிராமத்தில் ஒருவன் விவசாயம் செய்து வந்தான் அவனுக்கு ஒரே பிள்ளை அவனை மிகவும் பிரியமுடன் வளர்த்து வந்தார்.

ஒருநாள் அந்தப் பிள்ளையை ஒரு பாம்பு தீண்டிவிட்டது. அவன் இறந்துவிட்டான்.

மகனை இழந்துவிட்டோம் என்று தெரிந்ததும் கொதித்துப்போனான். அந்தப் பாம்பின்மீது பயங்கர கோபம் உண்டாகியது.

உடனே ஒரு கோடாரியை கையில் எடுத்துக்கொண்டு பாம்பைத் தேடிப் புறப்பட்டான்.

அதைத் தேடிக்கண்டு பிடித்து மெதுவாக அதனருகில் போய் ஓங்கி ஒரு போடு போட்டான்.

அவ்வளவு தான் அந்தப் பாம்பின் வால் துண்டானது வால் மட்டும் அப்படியே கிடக்க பாம்பு ஓடிவிட்டது.

அதன் பின்னர் இவனுக்கு ஒருவித பயம் உண்டாகியது. அடிபட்ட பாம்பு மீண்டும் பழிவாங்க வந்துவிடுமோ என்ற பயம்தான் அது.

சில நாட்கள் கழிந்துவிட்டது. இப்படி பயந்துகொண்டே எத்தனை நாட்களுக்குத்தான் உயிர் வாழ்வது அந்த பாம்புடன் பேசி சமாதானம் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

உடனே ஒரு கோப்பையில் பால் எடுத்துக்கொண்டு போனான். பாம்பு புற்றுக்குப் பக்கத்தில் வைத்தான் பாம்பு வெளியில் வந்தது.

இவன் விபரத்தை சொன்னான்.

அதற்கு அந்தப் பாம்பு. "இதோ பார்.. இனிமேல் நாம் நண்பர்களாக ஆவதென்பது முடியாத காரியம்.

நான் உன்னைப்பார்க்கும் போதெல்லாம் அல்லது உன்னை நினைக்கும் போதெல்லாம் எனக்கு என்னுடைய அறுபட்ட வால் தான் நினைவுக்கு வரும். அதேபோல் நீ என்னைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இறந்துபோன உன்னுடைய மகனின் நினைப்புத்தான் உனக்கு வரும்.

ஒருவர் நமக்கு செய்யும் தீங்கு நம் மனதில் ஆழமாக பதிந்துவிடுகிறது. பழிவாங்கும் சுபாவம் தலைதூக்கி நிற்கிறது" என்று சொல்லிவிட்டு அந்தப் பாம்பு புற்றுக்குள் போய்விட்டதாம் பொதுவான உலக இயல்பு இது.

மற்றவர்கள் நமக்குச் செய்த நல்லதையெல்லாம் சுலபமாக மறந்துவிடுகிறோம். ஆனால் அவர்கள் செய்த தீமைகள் நம் மனதில் ஆழமாக பதிந்து விடுகிறது. அதுமட்டுமல்ல. மனமானது பழிவாங்குவதற்கான தருணத்தை எதர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறது.

இதனால் என்ன ஆகப்போகிறது? மனதில் அமைதி இல்லாமல் எப்பொழுதும் பயந்து பயந்து வாழவேண்டியிருக்கிறது.

அதனால் வாழ்கையில் மகிழ்ச்சியும் மன அமைதியும் வேண்டும் என்று நினைப்பவர்கள் மற்றவர்கள் செய்த தீமைகளை மறந்துவிடவேண்டும். நன்மைகளை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

நம்மவர்களில் சிலர் பழிவாங்கும் விதமே தனி ஒருவன் இன்னொருவனைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தான்.

அந்தவழியாக வந்த ஒருவர் "ஏன் அவனை இப்படிப்போட்டு அடிக்கிறாய்" என்று கேட்டார்.

"இவனைப் பழிவாங்கிக் கொண்டிக்கிறேன்" என்றான் அவன்.

"எதற்காகப் பழிவாங்குகிறாய்?" என்றார். "அவன் என் முகத்தைப் பார்த்து தேவாங்கு" என்று திட்டிவிட்டான்.

"எப்பொழுது திட்டினான்?" என்று கேட்டார் அவர் "ஆறு மாதத்துக்கு முன்" என்றான்.

"அதற்கு ஏன் இப்பொழுது அடிக்கிறாய்?" என்றார். "நான் இன்றுதான் தேவாங்கை நேரில் பார்த்தேன்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய போட்டி முடிவுகள்

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலைப் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதம் 2008ஐ முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்று வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் சரசாலை பொதுநூலகரினால் அறிவிக் கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு,

**கதை கூறல்**

வி.அபர்ணன்-கமலாசனி வித்தியாலயம் , சு. சங்கீதன்-வீரசிங்கம் மகாவித்தியாலயம்

**மூன்றாம் இடம் மூவர்**

பா. பிரியங்கா -சந்திரமெளலீஸா-வித்தியாலயம், யோ. சந்தோஸ்-வீரசிங்கம் மகாவித்தியாலயம், பே. மதுஷிகா-வீரசிங்கம் மகாவித்தியாலயம்

**பேச்சுபோட்டி**

க. கவிப்பிரியா -வீரசிங்கம் மகாவித்தியாலயம், வ. ஜனுசன்-ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், செ.லக்ஷனா-சந்திரமெள லீஸா வித்தியாலயம்

**வாசிப்பு போட்டி 2ம் ஆண்டு**

சி.தேனுஜா -G.T.M.S மகாவித்தியாலயம், சி.சிவரம்யா -கமலாசனி மகாவித்தியாலயம், த.நிக்சன்-மந்துவில் றோ.க.ம.வித்தியாலயம்,

**3ம் ஆண்டு**

கு.நிஸ்மியா-G.T.M.S மகாவித்தியாலயம், கு. தர்சனா -கமலாசனி மகாவித்தியாலயம்.

**மூன்றாம் இடம் இருவர்**

கெ. மதுஷா -சாந்தநாயகி மகா வித்தியாலயம், க.கிருத்திகா-கமலாசனி-மகாவித்தியாலயம்.

**பாவோதல் போட்டி**

ப.தர்சன்-கமலாசினி வித்தியாலயம், கு.வருதி -கமலாசனி வித்தியாலயம், சி.தர்சா-சரஸ்வதி வித்தியாலயம்

**கட்டுரைப் போட்டி**

தி. ஆரணி-சந்திரமெளலீஸா வித்தியாலயம், மு.ஐஜீபா-சந்திர மெளலீஸா வித்தியாலயம், பே. கோகுலா-மந்து றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

**கவிதைப் போட்டி**

வா.குவேந்தினி-வீரசிங்கம் மகாவித்தியாலயம், செ.வர்மினி-வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

முன்பள்ளி மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கொன்றைவேந்தன் மனனப்போட்டி

செ.பவித்திரன் -மாதுமை முன்பள்ளி.

**இரண்டாம் இடம் இருவர்**

ய.நிதர்ஷனா-மாதுமை முன்பள்ளி, ந. ரக்சனா-மயூரி முன்பள்ளி, செ.ரிஷிகேசன்-மாதுமை முன்பள்ளி.

(ஓ-6)

# அரச அலுவலக சிற்றூழியர்களை

## முகாமையாளர் தரம் III இற்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை

அரச அலுவலகங்களில் சிற்றூழியர்களை முகாமை உதவியாளர் தரம் IIIற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சையில் சித்தியெய்தியோருக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு:

செ.ஜெயச்சந்திரன்-ஆய்வு கூட உதவியாளர்-வலயக் கல்வி பணிமனை வலிகாமம், யோ.செந்திமயூரன்-சாதாரண தொழிலாளி-யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, க. ஜீவானந்தம்-அலுவலக தொழிலாளி-வலி தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய், ம. யோகராசா-அலுவலக பணியாளர் - பிரதேச சபை வேலனை, ப.மகேசன்-ஆய்வுகூட உதவியாளர் -வலயக்கல்வி பணிமனை வலிகாமம், அ.பற்குணநாதன்-சந்தைப்பாதுகாவலர் -நகரசபை வவுனியா, கி.யதீஸ்குமார்-பாடசாலைப் பணியாளர் -வலயக்கல்விப் பணிமனை யாழ்ப்பாணம், தி. சிவகடாட்சம்-ஆய்வுகூட உதவியாளர் -வலயக் கல்விப் பணிமனை சாவகச்சேரி, சி.சிறிஞானேஸ்வரன்-சாரதி -வீதி அபிவிருத்தி திணைக்களம், வே. சந்திரமோகன் - நூலக தொழிலாளி- வலிகிழக்குப் பிரதேச சபை புத்தூர், கே. ஆரூரன்-தூதுவர் -வலி. தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய், து.குகன் -ஆய்வுகூட உதவியாளர்-வலக்கல்வி பணிமனை வலிகாமம், மைதிலி விஜயராணி - அலுவலக உதவியாளர்-வலயக் கல்விப் பணிமனை யாழ்ப்பாணம், பொ.சிவநேசன்-காவலாளி -வலி வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை, இ.சர்வே ஸ்வரன்- பாடசாலைப் பணியாளர் -வலயக்கல்விப் பணிமனை வலிகாமம், ப.சர்வேஸ்வரன்-பாடசாலைப் பணியாளர் -வலயக்கல்வி பணிமனை வலிகாமம். (ஓ-6)

# இராசி பலன்

*11.11.2008*
*(ஐப்பசி 26 ,செவ்வாய்க்கிழமை)*
*ரேவதி பிற்பகல் 2.24மணிவரை*
*திரயோதசி பிற்பகல் 4.31 மணிவரை*
*இராகுகாலம் 3.06-4.36மணிவரை*
*சுபநேரம் 10.36-12.36 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை,குடும்பக் கவலை, முயற்சி தாமதம், தீடீர் பயணம். |
| இடபம் | நண்பர்கள் உதவி, குடும்ப சுகம், சயனசுகம், தனவருவாய். |
| மிதுனம் | எடுத்த கருமங்கள் கைகூடும் ,நன்கொடை,அதிகாரம், பிறர் உதவி. |
| கடகம் | எதிர்பாராத செலவு ,பிரயாணம், தொழில் மந்தநிலை, வீண்பயம். |
| சிங்கம் | கடன் பிரச்சினை, வாகன பயம், காரிய தடங்கல், தர்மம். |
| கன்னி | மனோதைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை, முயற்சிகைகூடும் |
| துலாம் | அதிக பிரயாசை, போசன நன்மை, சத்துரு ஜெயம், உடல் நலம். |
| விருச்சிகம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பூர்வ புண்ணிய கருமம், பணவிரயம். |
| தனுசு | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், போசன சுகம், சுபசெலவு |
| மகரம் | பிரயாண நன்மை,காரியசித்தி , கீர்த்தி, உறவினர் உதவி. |
| கும்பம் | கடினவார்த்தை,எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், மாதா உதவி. |
| மீனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, கலந்துரையாடல், போசன சுகம். |

வளவன்

# குறைகேள் அரங்கு

## அஞ்சல் பெட்டிகளை மதிப்போம்




சர்வதேச மட்டத்தில் அஞ்சல் தினம் ஒக்ரோபர் 9ஆம் திகதி கொண்டாடப்பட் டது.

இந்தநிலையில் அஞ்சல் பெட்டிகளின் நிலை பற்றி சிறிது சிந்திப்பது சாலபொருந்தும் என எண்ணுகிறோம்.

இதயங்களின் இணைப்பு பாலமாக காலங்காலமாக கட மையாற்றுகின்ற அந்தப் பெட்டிகள் அமைதியாக உங்களுக்காக பணியாற் றிக் கொண்டு இருக்கின்றன. அவை ஆற்றுகின்ற பணிக் காக அவற்றை நாம் மதிக்கா விட்டாலும் பரவாயி ல்லை. அவமதிக்காமல் இருந்தால் அதுவே மேலா னது.

அஞ்சல் பெட்டிகளில் விளம்பரங்கள் ஒட்டுவது வேறு விதங்களில் அசிங்கப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டிய செயலாகும். சிலர் அதன் மேல் அமர்ந்து பத்திரிகை வாசிப்பதும் காலால் தாளம் போடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அண்மையில் நடந்து முடிந்த நல்லூர் தேர்த்திருவிழாவின் போது தெற்கு வீதியில் இருக்கும் சீமெந்திலான தபால் பெட்டியின் மேல் ஏறி நின்று வீடீயோ படம் பிடித்த செயல் ஒட்டு மொத்த அஞ்சல் சமூகதையே அவமதித்தது போல் இருந்தது. ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது புரியவில்லை. மக்களிடம் ஓர் பணிவான வேண்டுகோள்.

அஞ்சல் பெட்டிகளைப் புனித சின்னமாக பாருங்கள். அவற்றின் மதிப்பை மேன்மைப்படுத்துங்கள் அவை அன்பைப் பரிமாறும் பெட்டகங்கள் எனப் புரிந்துகொள்ளுங்கள்.

*சிந்திப்போம்! செயல்படுவோம்*

**- அஞ்சல் நலன் விரும்பி -**

# அமெரிக்கத் தேர்தலும் வன்னிக்களமுனையும்

தமிழ் மக்களுக்கு மிகவும் நெருக்கடி மிகுந்ததாக அமைந்துவிட்ட 2008ஆம் ஆண்டு விடைபெற்று செல்வதற்கு இரு மாதங்களுக்கும் குறைவான நாட்களே உள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு ஓரளவேனும் ஆறுதல் தரக்கூடிய புறச்சூழல்கள் மெதுவாக மாற்றம் பெறத் தொடங்கியுள்ளன.

தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி குறுகிய அரசியல் நலன்கொண்ட அரசியல் தலைவர்களின் அபிலாஷைகளில் சிக்குண்டு ஒரு உத்வேகம் குன்றிய போதும், தமிழக மக்களிடம் தோன்றியுள்ள எழுச்சியானது, தமிழ் இனம் என்ற ஒரு சக்தியாக பலம் பெற்று வருவது முக்கியமானது. அங்கு தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டங்கள் அதனையே பிரதிபலிக்கின்றன.

இதனிடையே உலகின் தனி வல்லரசாக உலக ஒழுங்கில் பல நெருக்கடிகளுக்கு காரணமாக இருந்த அமெரிக்காவிலும் பாரிய ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. அமெரிக்க வரலாற்றில் முதற்றடவையாக கறுப்பு இன பிரஜை ஒருவர் அரச தலைவராக தெரிவாகியுள்ளார்.

47 வயதான பராக் ஹுஸைசன் ஒபாமா வெள்ளை நிறத் தாயாருக்கும், கறுப்பினத் தந்தையாருக்கும் அமெரிக்காவின் ஹவாய்த் தீவில் பிறந்தவர்.

அமெரிக்காவில் ஒரு மாற்றம் வேண்டும் என அனைத்துலக சமூகம் மட்டுமல்லாது, அமெரிக்க மக்களும் எதிர்பார்த்திருந்த வேளையில் ஒரு மாற்றத்திற்கான அறிகுறிகள் தென்படுவதாகவே அமெரிக்கா முதற்கொண்டு அனைத்துலக ஊடகங்களும் ஆரூடம் கூறிவருகின்றன. நீண்டநாட்களாக ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் இழுபட்டு செல்லும் போர், அமெரிக்காவில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடிகள் என்பன அங்கு ஒரு மாற்றம் வேண்டும் என அமெரிக்க மக்களைக் கூட சிந்திக்க வைத்திருந்தது.

எனினும் ஒபாமாவின் வரவைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என அமெரிக்காவின் கூட்டணி நாடுகள் அச்சமடையத் தேவையில்லை என முன்னாள் இராணுவ உயர் அதிகாரியும், அரசியல் உயர் அதிகாரியுமான கொலின் பவல் தெரிவித்துள்ளார். ஒபாமாவுக்கு நாம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பது தெரியும், எமது எதிரிகள் யார் என்பதும் தெரியும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

ஆனால் முன்னைய ஜோர்ஜ் புஷ் நிர்வாகம் கடைப்படித்து வந்த வெளிவிவகாரக் கொள்கைகளில் இருந்து வேறுபட்டதாகவோ அல்லது சற்று விலகியதாகவோ ஒபாமா அரசாங்கத்தின் கொள்கைகள் இருக்கலாம் என ஆசிய ஊடகங்கள் பல தெரிவித்துள்ளன.

இலங்கை இனப்பிரச்சினையை பொறுத்தவரையில் உலகில் இடம்பெற்றுவந்த இனப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் மேற்கொண்ட நகர்வுகளை ஒத்ததாகவே ஒபாமாவின் நகர்வுகள் இருக்கலாம் என்ற எதிர்பார்ப்புகளும் தோன்றியுள்ளன.


பில் கிளிண்டனின் கொள்கைகளுக்கு ஒபாமாவின் ஆதரவுகள் எப்போதும் உண்டு. முன்னாள் யூகோஸ்லாவியாவில் இடம்பெற்றுவந்த இன முரண்பாடுகளுக்கு தீர்வாக பொஸ்னியா, மொன்ரோநீக் குரோ, கொசோவா போன்ற சிறிய தேசங்கள் உருவாகுவதற்கான அடிப்படையை 1990களின் பிற்பகுதியில் நிறுவியவர் பில்கிளிண்டன் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

வட அயர்லாந்து போராட்டத்தை முடிபுக்கு கொண்டுவருவதிலும் பில்கிளிண்டனின் பங்கு அளப்பரியது. வடஅயர்லாந்தின் பெல்பாஸ்ட் நகரத்தில் உள்ள ஐரோப்பா ஆடம்பர விடுதியில் பில் கிளிண்டன் தனது பாதுகாப்பையும் பொருட்படுத் தாது வந்து தங்கிச் சென்றது போரினால் சிதைவடைந்திருந்த அந்த நகரத்தின் பொருளாதாரத்தை மறுசீரமைத்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்போரை முடிபுக்கு கொண்டுவருவதற்கும் கிளிண்டன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுவதற்கு முக்கிய பங்காற்றியவர்களில் கிளிண்டனும் ஒருவர். எனினும் அது இலங்கை அரசினால் பின்னர் தந்திரமாக சிதைக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் நடைபெற்றுவரும் இன் மோதல்களை தீர்ப்பதற்கு உதவியாக கிளிண்டன் மன்றம் (**Clinton Foundation**) என்ற ஒரு அமைப்பையும் அவர் ஏற்படுத்தியிருந்தார்.

ஒபாமா அரச தலைவராக பதவியேற்றதும், முன்னாள் ஜனநாயகக் கட்சியின் தலைவரான பில் கிளிண்டனின் அமைப்பு ஒபாமாவின் ஆதரவை பெறக்கூடும் எனவும் கருதப்படுகின்றது. எனவே இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பில் கிளிண்டன் விரும்பினால் அவர் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இலங்கை அரசுக்கு ஆதரவாக நடைமுறைப்படுத்திய பயங்கர வாதத்திற்கு எதிரான போர் என்ற கொள்கைக்குப் பதிலாக இனப்பிரச்சினையை தீர்க்கும் கொள்கையொன்றை அமுல்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக இராஜதந்திர அழுத்தங்களும் பயன்படுத்தப்படலாம்.



இதனிடையே கடந்த ஜூலை மாதம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, ஒபாமாவை ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் சந்தித்திருந்தார். இந்த சந்திப்பும் தமிழ் மக்களிடம் ஒரு நம்பிக்கையை துளிர்விட வைத்திருந்தது. நம்பிக்கைகள் அதிகம். ஆனால் அதுவே ஆபத்தும் ஆகலாம்.

அடுத்த வருடம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இந்திய பொதுத்தேர்தலில் இந்திய அரசியலிலும் மாற்றங்கள் ஏற்படலாம் என்ற கருத்துக்கள் வெளிவர ஆரம்பத்துள்ளன. இந்தியாவின் பிரதமராக மன்மோகன் சிங் பதவியில் அமர்ந்துள்ள போதும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தின் வழிகாட்டுத் தலைவருமான சோனியாக காந்தியின் வழிநடத்தலில்தான் இந்தியாவின் ஆட்சி அதிகாரம் சென்று கொண்டிருப்பதாக எதிர்த்தரப்பினர் சுட்டிக்காட்டி வருகின்றனர். சோனியா காந்தியின் மேற்குலகம் சார்பான கொள்கைகள் இந்தியாவின் அடையாளத்தை வருங்காலத்தில் அழித்துவிடும் என்ற கருத்துக்களும் வெளியிடப்படுகின்றன. இந்திய அரசு தற்போது மேற்கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான நிலைப்பாட்டிற்கும் சோனியா காந்தியின் அழுத்தம் காரணம் என்பது எதிர்த்தரப்பின் வாதம்.

இதற்கு எதிராக கடந்த ஜூலை மாதம் மன்மோகன் சிங்கிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்ட போது 19 வாக்குகளால் அரசாங்கம் தப்பிப்பிழைத்திருந்தது. இந்த வாக்கெடுப்பில் தமிழகத்தின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு சார்பாக வாக்களித்திருந்தனர். தமிழகம் எதிர்த்து வாக்களித்திருந்தால் அன்றே அரசாங்கம் கவிழ்ந்திருக்கும்.

சோனியா காந்தியின் மேற்குலகம் சார்ந்த அரசியல் நலன்களுக்கு அப்பால் தமிழ் மக்களை பழிவாங்கும் அரசியல் ஆதங்கமும் இருக்கலாம். அதாவது இலங்கையின் இனப்பிரச்சினையில் இருந்து இந்தியா ஒதுங்கியிருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை வெளியில் உருவாக்கியபடி தமிழ் மக்களின் விடுதலைப்போராரை முற்றாக நசுக்கிவிடுவதே அவரின் உள்ளார்ந்த திட்டம் என்பது தற்போது பலருக்கும் தோன்றியுள்ள சந்தேகம். இதை அண்மையில் அவரின் புதல்வர் ராகுல் காந்தி விடுத்த அறிக்கையில் இருந்து காணக்கூடியதாக உள்ளது.

அதாவது, சோனியாவின் உத்தி மெல்ல கொல்லும் உத்தி அல்லது மறைந்திருந்து தாக்கும் உத்தி என்று கூட அதனை வரையறுத்துக் கொள்ளலாம். தற்போதைய அரசாங்கம் போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து தன்னிச்சையாக விலகியபோது கருத்துக்கூற மறுத்த இந்திய மத்திய அரசு படைத்துறை உதவிகளை மிகவும் அதிகளவில் வழங்கி வருவதன் நோக்கம் அதுவே என்பதும் அரசியல் அவதானிகளின் கருத்து.

இலங்கைக்கு வெளியில் உள்ள இந்த புறச்சூழல்கள் மெல்ல மெல்ல மாற்றம் பெற்றுவருகையில் படைத்துறை ரீதியாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை கண்டுவிட முடியாது என்ற வாதமும் வலுப்பெற்று வருகின்றது. எனினும் படைநடவடிக்கையையே தனது அரசியலின் ஆணிவேராக கொண்டுள்ள அரசாங்கம் அதற்கான முயற்சிகளையே பெருமளவில் முன்னெடுத்து வருகின்றது.

தற்போது வன்னிக்கள முனைகளில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் 6 டிவிசன் படையினருக்கு பக்கபலமாக 7 ஆவது டிவிசனை அரசு களமிறக்கியுள்ளது. நடவடிக்கை படையணி மூன்று (**Task Force III**) அல்லது 63 ஆவது டிவிசன் எனப்படும் இரண்டு பிரிகேட்டுக்களை கொண்ட இந்த படையணியின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் ரட்னபிரியா லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் கவசப் படையணியில் பணியாற்றியவர்.

நான்காவது ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் உருவாக்கப்பட்டுள்ள ஆறாவது புதிய டிவிசன் இதுவாகும். இந்த டிவிசனின் முதலாவது பிரிகேட்டின் (63-1) கட்டளைத் தளபதியாக 59 ஆவது படையணியின் 7ஆவது கெமுனுவோச் றெஜிமென்ட் படையினரை வழிநடத்தி வந்த லெப்.கேணல் பிரியந்த பெரேராவும், 63-2 பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக லெப். கேணல் சுபாசனா வெலிகலவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் 57ஆவது பன்டையணியின் 4ஆவது சிங்க றெஜிமென்ட் படைப் பிரிவை வழிநடத்தியவர். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு படையணிகளில் 61ஆவது படையணியை தவிர ஏனைய படையணிகள் ஐந்தும் தாக்குதல் படையணிகளாக உருவாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மாங்குளம் நோக்கிய நகர்வில் இந்த படையணி ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் கடந்த வியாழக்கிழமை மாலை இராணுவத்தின் 57ஆவது படையணியினர் கிளிநொச்சிக்கு தென்மேற்காக ஒன்பது கி.மீ. தூரத்தில் உள்ள அக்கராயன்குளம் பகுதியை கைப்பற்றியுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

57ஆவது படையணியை சேர்ந்த 3 ஆவது கஜபா றெஜிமென்ட் படையினர் மேஜர் சன்ஜயா பெர்னாண்டோ தலைமையிலும், 9 ஆவது விஜயபா றெஜிமென்ட் லெப். கேணல் சிசிரா ஹேரத் தலைமையிலும், 8 ஆவது இலகுகாலாட் படையினர் லெப். கேணல் இப்சிதா திஸாநாயக்கா தலைமையிலும் அக்கராயன்குளம் பகுதி மீதான படை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்ததாகவும், இந்த நடவடிக்கையின் போது 7 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர் எனவும் அவை தெரிவித்துள்ளன.

எனினும் விடுதலைப்புலிகள் இது தொடர்பில் எதுவும் தெரிவிக்காத போதும் அப்பகுதியில் கடும் மோதல்கள் நடைபெற்றதாக வன்னியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே மன்னாரின் கரையோரமாக வடதிசையில் முன்னகர்ந்துவரும் இராணுவத்தின் 58ஆவது படையணியினர் கடந்த வாரம் நாச்சிக்குடா பகுதியை கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளனர். அதற்கு முன்னர் இராணுவத்தினர் ஜெயபுரம் பகுதியை கைப்பற்றியிருந்தனர்.

இந்த நடவடிக்கையில் 12ஆவது கஜபா மற்றும் 10ஆவது கஜபா றெஜிமென்ட் போன்ற படையினர் பங்குபற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த வாரம் சாலியபுர பகுதியில் நடைபெற்ற கஜபா றெஜிமென்ட் படையணியினதுமுன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா போரில் 80 வீதம் நிறைவுபெற்று விட்டதாக தெரிவித்துள்ளார். அதாவது 59 ஆவது படையணியினர் பூநகரியை அடையும் போது கிளாலி தொடக்கம் நாகர்கோவில் வரையில் நிலைகொண்டுள்ள 53 மற்றும் 55 ஆவது படையணியினர் ஆனையிறவை நோக்கி முன்நகர்வார்கள் எனவும் அப்போது போரில் பெரும்பகுதி நிறைவுபெற்று விடும் என்பதும், அதன் பின்னர் தற்போதுள்ள ஏறத்தாழ 100 பற்றாலியன் படையினரை பயன்படுத்தி வன்னியின் கிழக்குப்புறம் உள்ள பிரதேசங்களை கைப்பற்ற முடியும் என்பது அவரின் கணிப்பு.

காகிதத்தில் வரையப்படும் இந்த உத்திகளின் அடிப்படையில் போரில் 80 வீதம் நிறைவுபெற்று விட்டதற்கான கணிப்பீடு வெளிவந்துள்ளது. 1999ஆம் ஆண்டு இராணுவம் ஒட்டுசுட்டான் பகுதியை கைப்பற்றிய போதும் அன்றைய பாதுகாப்புத்துறை பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை போரில் 90 வீதம் நிறைவுபெற்று விட்டதாக தெரிவித்திருந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.

ஆனால் அதன் பின்னர் தான் கடும் போர் ஆரம்பத்திருந்தது. கடந்த ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா படையினர் சில தினங்களில் கிளிநொச்சியை கைப்பற்றிவிடுவார்கள் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது மூன்று மாதங்களை அண்மிக்கும் நிலையிலும் உக்கிர மோதல்கள் அங்கு நிகழ்ந்து கொண்டிருப்பதை காணலாம்.


மோதல்கள் உக்கிரமடைந்துவரும் நிலையில் விடுதலைப்புலிகள் தமது தாக்குதல் அணிகளை மீண்டும் ஒழுங்குபடுத்தி உள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. கிளிநொச்சியை நோக்கி நகர்வில் ஈடுபட்டு வரும் படையினருக்கு எதிரான தாக்குதல்களில் கேணல் லோறன்ஸ் மற்றும் கேணல் லக்ஸ்மன் ஆகியோருடன் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி லெப். கேணல் வேலவனும் களமிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் ஆழ ஊடுருவும் படையணிகளின் நடவடிக்கைகளை வழிநடத்திவரும் கேணல் ஜெயம் தற்போது மணலாறு களமுனைகளில் 59 ஆவது படையணியினருக்கு எதிரான தாக்குதல்களை வழிநடத்தும் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை வழிநடத்தி வந்த கேணல் சொர்ணத்தை விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் அவசரமாக அழைத்துள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

முன்னணி களமுனைகளில் பணியாற்றி வந்த மூத்த தளபதிகளில் பலரை விடுதலைப்புலிகள் திடீரென உள்வாங்கிக் கொண்டது தாக்குதல் திட்டம் ஒன்றிற்கான அறிகுறியாக இருக்கலாம் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் கிழக்குப் பகுதிகளிலும் தாக்குதல்கள் அதிகரித்து வருவது நோக்கத்தக்கது.

கடந்த ஒரு வாரத்தில் கிழக்கின் பல பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களில் 11 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இந்த காலப்பகுதியில் அங்கு பல படையினரும் கொல்லப்பட்டிருந்தனர். நாயாறு பகுதியில் இருந்து திருமலைக்கு விடுதலைப்புலிகளின் சிறப்பு அணியொன்று ஊடுருவியுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. வடபகுதியில் மட்டுமல்லாது கிழக்கு மற்றும் தென்னிலங்கையின் ஆழமான பகுதிகளிலும் அதிகரித்து வரும் மோதல் கள் எடுத்துக்காட்டும் செய்தி என்ன என்பதே தற்போது பலரினதும் ஆர்வம். பாரிய மோதல் ஒன்று வட போர் முனையில் ஆரம்பமாகும் போது கிழக்கிலங்கையும் ஆட்டம் காணலாம் என்பது ஊகமாக எழுந்துள்ளது.

# நோத்முதல் கோயல்லவா வரை (150)




## டொனமூர் கண்ட அரசாங்க சபை

சகல தொகுதிகளிலும் தேர்தல் நிறைவேறியதும் பிரதிநிதித்துவம் பெறாத சமூகங்களுக்கு ஆள்பதி பிரதிநிதிகளை நியமிப்பர். பின்னர் குறிக்கப்பட்ட நாளில் அரசாங்க சபை கோலாகலமாகக் கூடும்.

### அரசாங்க சபை

அரசாங்கசபைப் பிரதிநிதிகள் அங்கே கூடியதும், சபாநாயகர் எனப்படும் வாசகர் தெரிவு நடைபெறும். தெரியப்பட்ட வாசகர் தலைமையில் அங்கத்தவர் தங்களை இரகசிய வாக்களித்தல் மூலம் ஏழு நிர்வாக சபைகளில் பிரித்துக்கொள்வார்கள். நிர்வாக சபைகள் ஒவ்வொன்றாகத் தனித்தனி கூடித் தத்தம் தலைவரைத் தெரிந்துகொள்ளும். அங்ஙனந் தெரியப்பப்பட்ட தலைவர்கள் ஏழு பேரையும் ஆள்பதி அங்கீகரித்து மந்திரிமார் என நியமித்துக் கௌரவிப்பார். அவர்கள் ஏழு பேருடன் அரசாங்க உத்தியோகத்தரான காரியதரிசிகள் மூவரும் சேர மந்திரிமார் சபையில் பத்துப் பேர் இருப்பர். மந்திரிமார் சபைக்குப் பிரதம காரியதரிசியே தலைமை தாங்குவாராகையால், அச் சபைக்கு உப தலைவராக ஏழு மந்திரிமாருள் ஒருவர் தெரியப்படுவர். அவர் அரசாங்க சபையின் முதல்வர் எனவும் வழங்குவர். அரசாங்க சபையின் அமைப்பைப் பின்வரும் வரைவில் விளக்கலாம்.




இங்ஙனம் அமைந்த அரசாங்க சபை, முன்னர் நிலவிய சட்டசபையின் அலுவல்

**மீள் பார்வை**

களையும் சட்ட நிர்வாகசபையின் அலுவல்களையும் நடத்தும். சட்ட நிர்வாக சபையின் அலுவல்களை மந்திரிமார் பதின்மரும் இயற்றுவர். மந்திரிமார் சபையில் உத்தியோக அங்கத்தவர் மூவரும் உத்தியோகப் பற்றற்றவர் எழுவரும் இருப்பர். முன்னர் சட்ட நிர்வாக சபையில் உத்தியோகப் பற்றற்றவரும் இருத்தல் வேண்டும் என்றும் அவர்கள் சட்ட சபைக்குக் கட்டுப்பட்டவராயிருத்தல் வேண்டும் என்றும் அரசியற் பண்டிதர்கள் செய்த கிளர்ச்சி இதற்காகவே தான். அவர்கள் நிர்வாக சபையில் அரைப் பங்கினர் தெரியப்பட்ட அங்கத்தவராயிருத்தல் வேண்டும் எனக் கிளர்ச்சி செய்தனர். ஆனால் இத் திருத்தத்தில் அம் மந்திரிமார் இரண்டு மடங்கதிகமானோராயிருந்தனர்.

அரசாங்க சபை வைகல்கள் சட்டவாக்கஞ் சம்பந்தமாக நடைபெறும்போது அது அதிகாரம் உள்ள சபையாய் இருக்கும். சமாதானத்துக்கும் அமைதிக்கும், நல்லரசாங்கத்துக்கும் அசசபை சட்டமியற்றும். ஆள்பதியின் ஒதுக்கதிகாரமும், மறுப்பதிகாரமும், உறுதிப்படுத்தும் அதிகாரமும், தவணையிடும் அதிகர்ரமும், திரும்ப ஆராய அனுப்பும் அதிகாரமும் நிலவுதல் அல்லாத போது சட்டசபைக்கு அதிகாரம் மெத்தவுண்டு.

இவற்றைவிட மன்னர்பிரான் குடியேற்ற மந்திரிமார் மூலம் சட்டவாக்கத்தை தடை செய்தலும் உண்டு. இலங்கை அரசாங்க சபைக்கு ஆள்புலப் புறத்துரிமைச் சட்டஞ் செய்யவோ, தன் நாட்டு அரச யாப்பைத் திருத்தியமைக்கும் சட்டஞ் செய்யவோ அதிகாரம் இல்லை. அன்றிப் பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கையின் பரிபாலனங் காரணமாக இயற்றும் சட்டங்களை மாற்றியமைக்கும் முகமாக இலங்கை அரசாங்க சபையால் சட்டஞ் செய்யவும் இயலாது.

முந்திய சட்டசபையின் வைகற் காலத்திலே கௌரவ அங்கத்தவர்கள் நீதிக்குழுவில் அமர்ந்து நிதி அலுவல்களைக் கண்காணித்துப் பேசினார்களேயல்லாமல் அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் 1931 ஆம் ஆண்டின் பின் அரசாங்க சபையில் அங்கத்தவர் பல வேறு நிர்வாக சபைகளின் அங்கத்தவர்கள் என்ற பெருமையில் திணைக்களங்களின் அதிபர்களோடு சேர்ந்து உபமானிய மதிப்புக்களைத் தயாரிக்கும் பொறுப்புடையவராயிருந்தனர். அதனால் அரசாங்க சபை அங்கத்தவருக்குப் பொறுப்போடு ஓரளவுக்கு அதிகாரம் இருந்ததென்பர். ஆகவே 1931 ஆம் ஆண்டு முதலாக இலங்கையின் தேசிய வரவு செலவு முறையாகத் தெரியபபட்ட அங்கத்தவர் ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் சம்பிரதாயமும் ஏற்படுவதாயிற்று. இவ்வாறமைந்த போதிலும் அரசாங்க சபைக்கு நிதியலுவலில் முழுப் பொறுப்பும் அமையவில்லை. ஆள்பதியின் பொறுப்பிலிருந்த பகிரங்க சேவையாளர் சம்பந்தமான நிதியலுவல்கள் அரசாங்க சபையைப் பொறுத்திருக்கவில்லை. அவர்கள் சம்பந்தமான நிதியலுவல்கள் ஆள்பதியின் அனுமதியில்லாமல் அரசாங்க சபையில் பேசப்படவும் இயலாதனவாகவே இருந்தன.

**க.சி.குலரத்தினம்**

அரசாங்க சபை நிராகரித்த சிலமதிப்பீடுகளை ஆள்பதி உறுதிப்படுத்தியுபயோகமாக்கியும் கொள்ளும் அதிகாரம் அவருக்கிருந்தது.

அம் மதிப்புக்களைக் கொண்டு உத்தியோகத்தரின் சலுகைப் பணமாதியன கொடுக்கப்பட்டும் வந்தன. என்றாலும் வரவு செலவுத் திட்டத் தை அரசாங்க சபை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்வாக்களித்தால் அரசாங்க சபையை ஆள்பதி குலைத்துவிட வேண்டிய விதிச் சடும் இருந்தது. அரசாங்க சபையின் 17 ஆண்டு காலத்தில் வரவு செலவுதத்திட்டம் என்றுமே நிராகரிக்கப்படவில்லை .அதனால் அரசாங்க சபை குலைக்கப்படவும் இல்லை. (தொடரும்)



காரைநகர் பிரதேசசபையின் உள்ளூராட்சி வாரவிழா அண்மையில் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உட்பட விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதனையும், தலைமை உரையாற்றும் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன், சிறப்பு விருந்தினர் உரையை காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் நிகழ்த்துவதனையும், திணைக்களங்களிற்கிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் பரிசினை தலைவர் சி.சிவஞானம் அதிபர் ந.பரமசிவத்திடம் பெற்றுக்கொள்வதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

**வரவு செலவு திட்டம் 2009**

# வரிவிதிப்பு மாற்றங்கள் : ஓர் ஆய்வு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் கடந்த 6 ஆம் திகதி நாடாளுமன்றத் தில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு-செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வரிவிதிப்பு யோசனைகள் மற்றும் மாற்றங்கள் பற்றியும் அதன் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றியும் இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

### 1.வருமானவரி

*1.1. வரிவிதி வருமான மட்டங்களும் வரி வீதங்களும் தனிப்பட்டவர்கள்*

வரி விதிப்புக்குரிய வருமான மட்டங்கள் பின்வருமாறு விரிவாக்கப்படும் வகையில் திருத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக தற்போது (2008/2009) ஆண்டுக்கு 2,000,000 ரூபா வரி விதிப்புக்குரிய வருமானத்தைக் கொண்ட ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையாகிய 445,000 ரூபா அடுத்த ஆண்டில் இருந்து (2009/2010) 295,000 ரூபாவாக குறைவடைவதன் மூலம் 150,000 ரூபாவை சேமிக்கக் கூடியதாக இருக்கும்.

**வரி விதி வருமான மட்டம்**

| தற்போது உள்ளவாறு (31.03.2009 வரை) (ரூபா) | உத்தேசிக்கப்பட்டவாறு (01.04.2009 இருந்து) (ரூபா) | வரி வீதம் |
|---|---|---|
| 1வது 300.000 | 1வது 400.000 | 5% |
| 2வது 200.000 | 2வது 400.000 | 10% |
| 3வது 200.000 | 3வது 400.000 | 15% |
| 4வது 200.000 | 4வது 500.000 | 20% |
| 5வது 200.000 | 5வது 500.000 | 25% |
| 6வது 500.000 மீதி | 6வது 500.000 மீதி | 30% |
| | | 35% |

*1.2. வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிலுள்ள வைப்புக்களிலிருந்தான வட்டி மீது நிறுத்தி வைத்தல் வரி.*

வரிமதிப்பாண்டில் தனிப்பட்டவர் ஒருவருக்கு வட்டி செலுத்தப்படுதல் அல்லது அவரது கணக்கில் வரவு வைக்கப்படும். வேளையில் மொத்த வருமானம் தொடர்பில் அவரது வெளிப்படுத்துகையை பொறுத்து வட்டி மீதி பின்வரும் அடிப்படையில் 01.04.2009லிருந்து நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படும்.

இதன்படி வட்டி வருமான ஆண்டொன் றுக்கு 700,000 ரூபாவைப் பெறும் ஒருவர் தற்போது செலுத்த வேண்டிய நிறுத்திவைத் தல் வரித்தொகையான 70,000 (700,000X10%) அடுத்த ஆண்டிலிருந்து(01.04.2009) 17,500 ரூபாவாக 700,000 2.5 % குறைவடைவதன் மூலமாக இத்தகைய அனுகூலத்தைப் பெறுவார்.


**வரி மதிக்கத்தக்க வருமானம்**

| தற்போது உள்ளவாறு (31.03.2009 வரை) (ரூபா) | உத்தேசிக்கப்பட்டவாறு (01.04.2009 இருந்து) (ரூபா) | நிறுத்தி வைத்தல் வரிவீதம் |
|---|---|---|
| 300,000 வரை | 300,000 வரை | இல்லை |
| 200,000 தொடக்கம் 600,000 வரை | 300,000தொடக்கம் 1000,000 வரை | 2.5 |
| 600,000 இற்கு மேற்பட்ட | 1,000,000இற்கு மேற்பட்ட | 10% |

*1.2. வரி விலக்குகளும் சலுகைகளும்*

1. லோஹேயர் அம்மையார் கடன்நிதியத்தினால் (Lady Lochore Loan Fund) அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வருமானம் விலக்களிக்கப்படும்.

2. இலங்கை அரசாங்கத்தினால் வதிவற்ற எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கையில் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட உரிமம் உள்ள பிணையில் விற்பனை



யில் இருந்து எழுகின்ற ஏதேனும் வியாபார இலாபம் அல்லது ஏதேனும் வட்டி 21.10.2008 ஆம் திகதியிலிருந்து வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

3.புத்தகம் ஒன்றினை முதலாவது அச்சிட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அத்தகைய புத்தக விற்பனையிலிருந்து எழுத்தாளருக்குக் கிடைக்கும் இலாபத்தில் 50 வீத வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

**பாலசுந்தரம் சிவாஜி**
B.A.(Hons), M.A.(Econ), MBA(Finance) FMAAT
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

4.நாடகம் ஒன்றின் தயாரிப்பாளர் அதனை மேடை யேற்றிய ஒருவருட காலத்திற்குள் கிடைத்த இலாபத்தில் 50 வீத வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். (தொடரும்)

# வடக்கு மாகாண கல்வித்திணைக்களம்
# க.பொ.த.சாதாரணதரப்பரீட்சை- 2008

## மாதிரி வினாத்தாள் -03 கணிதம் -II

### பகுதி – A

01) $A$ எனும் பெட்டியினுள் 3 சிவப்பு நிறப்பந்துகளும் 2 நீல நிறப்பந்துகளும் உள்ளன. $B$ எனும் பெட்டியினுள் 2 சிவப்புநிறப்பந்துகளும் 3 நீலநிறப்பந்துகளும் உள்ளன. கபிலன் இருபெட்டிகளில் ஒன்றைத் தெரிவு செய்கின்றான். அவன் பெட்டி $A$ யைத் தெரிவுசெய்வதற்கான நிகழ்தகவு $\frac{1}{3}$ ஆகும்.

(i) a.கபிலன் பெட்டி Bயைத் தெரிவு செய்வதற்கான நிகழ்தகவு யாது?


b. கபிலன் பெட்டி ஒன்றினை தெரிவு செய்து அதிலிருந்து ஒருபந்தை எடுக்கின்றான். இப்பரிசோதனைக்கான மாதிரிவெளியை மரவரிப்படத்தில் தருக?

c. மாதிரிவெளியை பயன்படுத்தி பின்வருவனவற்றுக்கான நிகழ்தகவுகளை காண்க.

i. பெட்டி A இல் இருந்து சிவப்புநிறப்பந்தை எடுத்தல்.

ii. நீலநிறப்பந்தை எடுத்தல்.

02) தரப்பட்ட உருவில் இருசமபக்க முக்கோணம் $\Delta PQR$ இல் $PQ = PR$ ஆகும். $\Delta PQS$ , $\Delta PTR$ என்பன சமபக்கமுக்கோணிகள் ஆகும். $QT, SR$ என்பன $O$ இல் இடைவெட்டுகின்றன.




(i) $SQ = TR$ எனக் காட்டுக.

(ii) $S\hat{Q}R = T\hat{R}Q$ எனக் காட்டுக.

(iii) $\Delta SQR$ , $\Delta TRQ$ என்பன ஒருங்கிசையுமென நிறுவுக.

(iv) $SQ//ST$ எனக்காட்டுக.

03) (i) தீர்க்குக. $2\ell gx + \ell g3 = \ell g48$

(ii) மடக்கை அட்டவணையை பயன்படுத்தி பெறுமானம் காண்க?

$$\frac{13.75 \times 0.76^2}{\sqrt{16.48}}$$


04) $ABCD$ ஓர் இணைகரம் ஆகும். மூலைவிட்டம் $AC$ இன் நடுப்புள்ளி $O$ ஆகும் $OE : EC = 2 : 1$ ஆகுமாறு $OC$ இல் புள்ளி $E$ அமைந்துள்ளது.

(i) $BD$ ஐ இணைக்கும்போது $O$ இனூடாக செல்லுமா? காரணம் தருக?


(ii) $\Delta DOE = \Delta BOE$ ஆவதற்கான காரணம் யாது?

(iii) $\Delta CED = \Delta CEB$ என நிறுவுக.

(iv) $\Delta BEC$ இன் பரப்பளவு $20cm^2$ எனில் இணைகரம் $ABCD$ இன் பரப்பளவு யாது?




05)




$1m$ நீளம் , $50cm$ அகலம் , $70cm$ உயரம் உடைய கனவுருவடிவ மீன் தொட்டி ஒன்றினுள் $h$ உயரத்திற்கு நீர் காணப்படுகின்றது. மீன் தொட்டியினது குறுக்குவெட்டுமுகம் $ABCD$ ஆனது உரு $II$ இல் காட்டப்பட்டவாறு அமையுமாறும்,மட்டுமட்டாக நீரமட்டமானது $AC$ வழியே அமையுமாறும் மீன் தொட்டியானது சரிக்கப்படுகின்றது.

(i) முக்கோணம் $ABC$ இன் பரப்பளவு யாது?

(ii) மீன் தொட்டியில் உள்ள நீரின் கனவளவு யாது?

(iii) மீன் தொட்டியானது சரிக்கப்பட்ட நிலையில் உள்ளபோது (உரு$II$) நீர் தொடுகையுறும் மொத்த மேற்பரப்பு யாது?

(iv) மீன் தொட்டியானது கிடை நிலையில் பேணப்படும்போது (உரு$I$) நீர் நிரலின் உயரம் h இன் பெறுமானத்தைக் காண்க?


06) தரப்பட்ட உருவில் வட்டத்தின் பரிதியில் உள்ள புள்ளி $P$ யில் வரையப்பட்ட தொடலி $PT$ ஆகும்.

(i) $R\hat{P}T = P\hat{Q}R$ ஆவதற்குரிய காரணம் யாது?

(ii) $Q\hat{P}T = P\hat{R}T$ எனக்காட்டுக.

(iii) $\Delta PRT$ இற்கு இயல்பொத்த முக்கோணி யாது?

(iv) $PT^2 = QT.RT$ எனக்காட்டுக.




### பகுதி – B

01)

மலிவு விற்பனை
ஒவ்வொரு பொருளுக்கும் 15%கழிவு
ரூபா 2000 தொகைக்குமேல் கொள்வனவு செய்தால்
மொத்தத் தொகைக்கு 25% விசேட கழிவு

இவ்விளம்பர அட்டை காட்சிப்படுத்தப்பட்ட கடை ஒன்றுக்கு செல்லும் கௌதம் என்பவர்

(i) ரூபா1200 விலை குறிக்கப்பட்ட நீளக்காற்சட்டை ஒன்றை வாங்குவதற்கு செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

(ii) 60% இலாபத்துடன் நீளக்காற்சட்டை விலை குறிக்கப்பட்டிருப்பின் இந் நீளக்காற்சட்டையை விற்பதன் மூலம் வியாபாரி அடையும் இலாபம் எவ்வளவு?

(iii) கௌதம் தெரிவுசெய்த சேட் ஒன்றின் விற்பனைவிலை ரூபா 850 எனின், அச்சேட்டின் குறித்தவிலை யாது?

(iv) இவ்விருபொருட்களையும் வாங்கியபின்னர் கௌதம் ரூபா 2000 ஐ வியாபாரியிடம் கொடுத்தான் எனின், அவன் பெறும் மீதிப்பணம் எவ்வளவு?

02) கூட்டல தொடர் ஒன்றின் நான்காம் உறுப்பு 9உம், ஏழாம் உறுப்பு 15உம் ஆகும்.

(i) முதல் உறுப்பு $a$, பொதுவித்தியாசம் $d$ எனக் கொண்டு $a, d$ இல் இரு ஏகபரிமானச் சமன்பாடுகளை அமைக்க?

(ii) a,d என்பனவற்றைக் காண்க?

(iii) இத்தொடரின் பத்தாம் உறுப்பு யாது?

(iv) இத்தொடரின் முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகைக்கான கோவையை n சார்பாக காண்க?

03. $y = (x-2)^2 - 2$ என்ற சார்பின் வரைபை வரைவதற்குபொருத்தமான $x$ இனதும் $y$ இனதும் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை தரப்பட்டுள்ளது.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 7 | | -1 | | -1 | | 7 |

(i) இவ் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக?

(ii) இரு அச்சுக்கள் வழியேயும் 10 சிறிய சதுரங்களை ஒரு அலகாக வகைகுறிக்குமாறு அறவிடையை எடுத்து $y = (x-2)^2 - 2$ என்னும் சார்பின் வரைபை வரைக?

(iii) சமச்சீர் அச்சினை வரைக?

(iv) இவ்வரைபிலிருந்து $(x-2)^2 = 2$ எனும் சமன்பாட்டின் தீர்வைக் காண்க?

04) உள்ளூராட்சி சபை ஒன்றில் வேலை செய்யும் ஊழியர்களின் வயது அடிப்படையிலான தகவல் சேகரிக்கப்பட்டு அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வயது (வகுப்பரயிடை) | 36 – 40 | 41 – 45 | 46 – 50 | 51 – 55 | 56 – 60 | 61 – 65 |
|---|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 4 | 8 | 7 | 5 | 4 | 2 |

(i) ஆகாரவகுப்பு யாது?


(ii) 46 – 50 எனும் வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாக கொண்டு விலகல் இடையைக் காண்க?

(iii) ஊழியர்களின் இடை யாது?

(iv) 41 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட ஒவ்வொருவரும் 2 மணித்தியாலங்கள் மேலதிகமாக பணிபுரிகின்றார்கள். மேலதிக வேலை எத்தனை மனிதமணித்தியாலங்கள்?

(v) மேலதிகமான ஒரு மணித்தியாலத்திற்கு உள்ளூராட்சி சபை ரூபா 60 கொடுப்பனவை வழங்குகின்றது எனின், அச்சபை ஒரு நாளைக்கு வழங்கும் மேலதிக கொடுப்பனவு யாது?

05)




கிடையான நேர்தெரு ஒன்றில் $100m$ இடைத்தூரத்தில் உள்ள புள்ளிகள் $A$யும் $B$யும் ஆகும். $AB$ இல் $A$ இல் இருந்து $48m$ தூரத்தில் உள்ள புள்ளி $X$ இலே நிலைக்குத்தான மரம் ஒன்று c s $ J . A இல் இருந்து மரத்தின் உச்சி Y இற்கான ஏற்றகோணம் $27^0$ 18’ஆகும்.

(i) தரப்பட்ட உருவை பிரதிசெய்து அதில் தரவுகளை குறித்துக் காட்டுக.

(ii) மரத்தின் உயரம் யாது?

(iii) BX இன் நீளம் யாது?

(iv) B இல் இருந்து மரத்தின் உச்சி Y இன் ஏற்றக்கோணம் யாது?

(v) திரிகோணகணித விகிதங்களைப் பயன்படுத்தி BY இன் நீளத்தைக் காண்க?

06) cm/mm அளவிடையைக் கொண்ட ஒரு நேர் விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி, அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி,

(i) 8.5cm நீளமுள்ள நேர்கோடு AB ஐ வரைக.

(ii) $B\hat{A}C = 60^{\circ}, AC = 6cm$ ஆகுமாறு முக்கோணி ABC யை பூர்த்தி செய்க.

(iii) $B\hat{A}C$ இனகோண இரு கூறாக்கியை வரைந்து, அது BCஐ சந்திக்கும்புள்ளியை Dஎனக் குறிக்க

(iv) Dஇல் இருந்து ABக்கு செங்குத்து வரைக. அது ABயை வெட்டும் புள்ளியை E எனக் குறிக்க.

(v) Bயை மையமாகவும் DEஐ ஆரையாகவும் கொண்ட வட்டம் ஒன்றை வரைக.அதுADயை வெட்டும் புள்ளியை F எனக் குறிக்க.

(vi) ஆரைச்சிறை EDF இன் பரப்பளவு , வரையப்பட்ட வட்டத்தின் பரப்பளவின் என்ன பங்கு?

# மன அழுத்தத்திற்கு பக்கவிளைவற்ற அக்குபஞ்சர் சிகிச்சை



டாக்டர் கலா தியாகராஜன்
M.D.(Acu) M.D.(Medi.Alt)
Mob+91 9884350084/9884438539

யானைப் பாகர்கள் அங்குசம் என்ற குச்சியின் முனையில் உள்ள சிறு ஊசியால் யானையின் உடலில் குத்தி, யானைகளை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை நாம் பலமுறை பார்த்திருப்போம். இந்த முறையினை சற்று உற்று நோக்கினால், சீனர்கள் இந்த உலகிற்கு வழங்கிய மருந்தில்லா மருத்துவமான அக்குபஞ்சர் என்ற மருத்துவ முறை நம் கண்முன் வந்து போகும். இந்த நிலையில், இந்த மருத்துவ முறையில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்டவரும், ஆங்கில மருத்துவத்தால் கைவிடப்பட்ட பல நோயாளிகளைக் குணப்படுத்தியவருமான டாக்டர் திருமதி கலா தியாகராசனை, அவரது சென்னையில் உள்ள இல்லத்தில் சந்தித்து, இந்த மருத்துவமுறை குறித்து எம் மக்களிடம் உள்ள சந்தேகங்களைக் கேட்டோம்.


***சைனிஸ் அக்குபஞ்சர் மருத்துவம், மற்ற சிகிச்சை முறைகளிலிருந்து எப்படி வேறுபட்டு, பலனைத் தருகிறது?***

அக்கு என்றால் ஊசி என்றும், பஞ்சர் என்றால் குத்துவது என்றும் பொருள். சீனர்களால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருத்துவ முறை மனித உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஆங்கில மருத்துவம். ஆயுள்வேதம், சித்த மருத்துவம் உள்ளிட்ட பல மருத்துவ முறைகளில், மருந்து மாத்திரைகள் போன்றவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மருந்து, மாத்திரைகள் எதுவுமின்றி, சிறு ஊசிகளை மனித உடலில் குறிப்பிட்ட இடத்தில் குத்தி, அதன்மூலம் உடலில் உள்ள நரம்புகள் மற்றும் தசை ஆகியவற்றின் செயல்திறனை ஊக்குவிக்கும் மருத்துவமுறை தான் இந்த அக்கு பஞ்சர் மருத்துவ முறை. இந்த மருத்துவ முற்றையை உலக சுகாதார அமைப்பு அங்கீ கரித்திருக்கிறது.

நமது உடலில் பதினான்கு சக்தியளிக்கும் ஓட்டப்பாதைகள் உள்ளன. இந்த ஓட்டப் பாதைகளில் புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிகளில்,ஊசிகளைக் கொண்டு, அக்கு பஞ்சர் முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆங்கில மருத்துவத்தில் நோயினால் தாக்கப்பட்ட பகுதியில் நேரடியாக சிகிச்சை வழங்கப்படுகிறது. ஆனால் அக்குபஞ்சர் முறையில் நேர் எதிரான ஓட்டப் பாதையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

உதாரணத்திற்கு, தீ விபத்தால் பாதிக்கப் பட்ட உறுப்புகளுக்கு நுரையீரல் மற்றும் பெருங்குடல் தொடர்புடைய ஓட்டப்பாதையில் இருக்கும் புள்ளிகளில் சிகிச்சையளித்து குணமாக்குகிறோம். இதன்மூலம் நமது உடலில் உள்ள உறுப்புகள் ஒன்றோடொன்று இணைந் திருக்கிறது என்பது உறுதிப் படுத்தப்படுகிறது.

***இம்முறையில் நோயினை எப்படி கண்டறிவீர்கள்?***



மனிதனின் கைகளில் உள்ள நாடிகளை பிடித்துப் பார்த்து அறிந்துகொள்கிறோம். இடது மணிக்கட்டுக்கு கீழே ரேடியம் இரத்தக் குழாயின் மீதிருக்கும் மேலோட்டமான நாடிகளும், அதே இடத்தின் ஆழத்தில் மூன்று நாடிகளும் உள்ளன. அதேபோல் வலது மணிக்கட்டில் மேலோட்டமாக இருக்கும் மூன்று நாடிகளும், அதன் ஆழத்தில் மூன்று நாடிகளும் உள்ளன. இந்த நாடிகளை பிடித்துப் பார்ப்பதன் மூலம், மனித உடலின் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

***இந்த சிகிச்சை முறையில், உடலில் ஊசி குத்தப்படுவதால் வலி ஏற்படுமோ? அதற்காக எப்படி சிகிச்சை வழங்குவீர்கள்?***

நாடியைப் பிடித்து நோயைக் கண்டறிந்த பின். சக்தி வழங்கும் ஓட்டப்பாதையில் உள்ள அக்குபஞ்சர் புள்ளியில் சிறு சிறு ஊசிகளை குத்தி. மெதுவாக வலது புறமாக திருப்பி சுற்றிவிடுவோம். சுமார் பத்து முதல் இருபது நிமிடம் வரை இந்த ஊசி உடலில் குத்தப் பட்டிருக்கும். பின் அதனை எடுத்துவிடுவோம். இந்த ஊசிகளை நேரடியாக அக்குபஞ்சர் புள்ளியில் குத்தப்படுவதால், குத்திய இடத்திலிருந்து இரத்தம் வராது. நோயின் தன்மைக்கு ஏற்றவாறு ஊசிகளை குத்துவோம். நோயின் தாக்கம் அதிகமாக இருந்தால், இரு தினங்களுக்கு ஒரு முறையும் தாக்கம் குறைவாக இருந்தால் வாரத்திற்கு ஒருமுறையும் குத்திக் கொண்டால் நோய் குணமாகும். அதே தருணத்தில் நோயின் தன்மைக்கு ஏற்றவாறு குத்த வேண்டிய ஊசிகளின் எண்ணிக்கை முடிவு செய்யப்படும். இது மனித உடலில் உள்ள தசைகளின் செயல்பாட்டை ஊக்குவிப்பதால், ஒரு முறை தாக்கி, குணமாக்கப் பட்ட நோய், மீண்டும் ஏற்படும் நிலை அக்கு பஞ்சர் சிகிச்சை முறையில் இல்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

***இந்த சிகிச்சையின் மூலம் குணமாக்கப்படும் நோய்கள் என்ன?***

மன அழுத்தம் உள்ளிட்ட மன நோய்கள், ஆண்மைக்குறைவு,வலிகள்,நரம்பு தொடர்பான நோய்கள், நுரையீரல் தொடர்பான சைனஸ்,ஆஸ்துமா,பெண்களுக்கு ஏற்படும் மகப்பேறு மற்றும் மாதவிடாய் கோளாறுகள், வயிறு,குடல் தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள்.கண்நோய்கள் ஆகியவற்றை எளிதாகக் குணப்படுத்த முடியும். இந்த சிகிச்சை முறையில் மருந்துகள் எதுவும் உட்கொள்ளத் தேவையில்லை. இதனால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படாது. கட்டணமும் குறைவு.

***சோரியாசிஸ் நோயினை இம்முறை மூலம் குணப்படுத்த முடியுமா?***

இலங்கையின் கடலோரப் பகுதிகளிலும், தமிழகத்தின் எல்லா இடத்திலும் பரவலாக பரவியிருக்கும் இந்த நோய், தலையில் மண்டை ஓட்டின் மேல் பாகத்தில் பொடுகுபோல் தோன்றி, பின்னர் உடலில் பல இடங்களில் வட்டமாகவும், சிறிதளவு உயர்ந்தும் காணப்படுகிறது. அதை சொரியும்போது, மீன் செதில் போல்,பக்குகள் உதிரும்.முழங்கை மடிப்பு, தொடை இடுக்குகளிலும், வயிறு, மூக்கு ஆகிய பாகங்களிலும் இவை அதிகமாகக் காணப்படும். முறையான மருத்துவத்தை மேற்கெள்ளாவிட்டால் உடல் முழுவதும் பரவி. மூட்டுக் களில் வீக்கத் தை உண்டாக்கி. தாங்க இயலாத வலியினை ஏற் படுத்தும் இதனால் கை,கால்களை அசைக்க இயலாமல், ஒரே இடத்தில் முடக்கிவிடும்.

இதனை ஆங்கில மருத்துவத்தில் ''சோரியாடிக் ஆர்திரைட்டீஸ்''என்று குறிப்பிடுகிறார்கள். இந்த நோய்க்கு மற்ற சிகிச்சை முறைகளில் மருத்துவம் பார்த்தால், அவை தற்காலிக நிவாரணத்தை மட்டுமே வழங்கும் இதற்கான நிரந்தர தீர்வை அக்குபஞ்சர் மட்டுமே வழங்குகிறது. இம்முறையில் நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் ஆகியவ்ற றின் தொடர்புடைய அக்குபஞ்சர் புள்ளிக ளில் சிகிச்சை வழங்கினால், எத்தனை நாள் பட்ட சோரியாசிஸ் நோயையும் குணமாக் கலாம்.

***மன அழுத்தத்திற்கு இந்த முறை மூலம் சிகிச்சை பெற்றால் பூரண பலன் கிடைக்குமா?***

இன்றைய தினத்தில் அதிகமானோர் பாதிக்கப்படுவது மன அழுத்தத்தால் தான். காரணம் சொல்ல முடியாத மனக் கவலைகள், தாங்க இயலாத பணிப்பளு ஆகிய வகைளைக் குறிப்பிடலாம். அதைவிட கொம்பியூட்டரில் பணியாற்றும் தொண்ணூறு சத இளைய சமூகத்தினர் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். இவர்கள் மற்ற மருத்துவ முறையில் சிகிச்சை எடுத்தால், பக்க விளைவுகளின் பாதிப்பில் இருந்து தப்ப முடியாது . ஆனால் அக்குபஞ்சரில் சிகிச்சை எடுத்துக் கொண்டால், மன அழுத்தம் ஏற்படுவதற்கான மூலகாரணமாகிய தாறுமாறான இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு ஆகியவற்றை சீராக்க முடியும். அதனுடன் உடலுக்கு தேவையான 21தாது உப்புகளையும்,அதன் குறைபாடுகளையும் கண்டறிந்து, பெரிகார்டியம் மற்றும் இருதயம் ஆகிய பகுதிகளில் அக்குப்ஞ்சர் சிகிச்சை மேற்கொண்டால் இவற்றைக் குணப்படுத்த இயலும்.

மேலும் கை,கால்களில் நடுக்கம், மனதை ஓரிடத்தில் நிலைப்படுத்த இயலாமை, உறக்கமின்மை ஆகியவற்றிற்கு தலைப் பகுதிகளில் உள்ள அக்குபஞ்சர் புள்ளிகளில் சிகிச்சை அளிப்பதன் மூலம் குணப்படுத்த முடியும்.

# 127 கிலோ இராட்சத நாய்க்கு சத்திரசிகிச்சை ; தொடர்ந்து உயிர்வாழ உணவுக் கட்டுப்பாடு



(லண்டன்)

பிரிட்டனில்மிக அதிகமாக, 127 கிலோ எடை கொண்ட இராட்சத நாயின், இடது பின்னங்காலில், அறுவைச் சிகிச்சை நடத்த கால்நடை மருத்து வர்கள் முடிவு செய்துள்ளனர். அறுவைச் சிகிச்சைக்கு பின்னர் நாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காக,அதற்கு உணவு கட்டுப்பாடு விதித்துள்ளனர். பிரிட்டனில்,கிரேட்டேன் மற்றும் நியூபவுண்ட் லாண்ட் இனத்தைச் சேர்ந்த நாய்களிடம் இருந்து கலப்பினம் மூலம் உருவாக்கப்பட் நாய் சாம்சன்.

ஆறடி உயரம் கொண்ட இந்த நாயின் எடை,127 கிலோ. பார்த்தாலே பயம் ஏற்படக் கூடிய பிரமாண்ட தோற்றம் கொண்டது. லின்கோல்ன் ஷைரில் உள்ள விபெர்டன் நகரைச் சேர்ந்த ராய் மற்றும் ஜூலி வுட் தம்பதியால் இந்த நாய் வளர்க்கபப்பட்டு வரு கிறது.

இந்த நாயின் இடது பின்னங்காலில் ஏற்பட்ட பிரச்சினையால்,வலியால் துடித்து வருகிறது. இதற்காக அறுவைச் சிகிச்சை மூலம் தசை நாரை அகற்ற டாக்டர்கள் முடிவுசெய்துள்ளனர். ஆனால்,இதன் அதிக எடை காரணமாக, அறுவைச் சிகிச்சையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் எடையைக் குறைத்தால் மட்டுமே அறுவைச்சிகிச்சை மேற் கொள்ள முடியும் என்ற முடிவுக்கு டாக்டர்கள் வந்தனர்.

நாயின் எடை குறைந்ததைத் தொடர்ந்து அதற்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. இது தற்காலிகமான அறுவைச் சிகிச்சை மட்டும் தான். இன்னும் 90 சதவீத சிகிச்சை மீதம் உள்ளது.

இது அடுத்த ஆறு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக சாம்சனுக்கு கடும் உணவுக் கட்டுப்பாடுகளை டாக்டர்கள் விதித்துள்ளனர். வழக்கமாக சாம்சனுக்கு வாரத்துக்கு 14 கிலோ நாய் உணவும், தினமும் ஒரு வான் கோழி இறைச்சியும் வழங்கப்படும். இப்போது இதில் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.உணவுக் கட்டுப்பாட்டுக்கு பின்னர் சாம் சனின் எடை 25 கிலோ குறைந் துள்ளது. இந்த நாய் ,மிகப் பெரியது. அதே சமயம் குண்டு நாயல்ல.

இதுபோன்ற நாய்கள் மிக உயரமாகவும், அதிக எடையுடனும் சுறுசுறுப்பாக இருக்கும். இவற்றுக்கு உணவுக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு, எடையைக் குறைத்தால், வழக்கமான சுறுசுறுப்பில் இருக்காது. இதை கவனத்தில் கொண்டு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (5)

# உறையவைக்கப்பட்ட எலிகளின் உடல்களிலிருந்து கலப்பிறப்பாக்கம்

## –ஜப்பானிய விஞ்ஞானிகள் ஆய்வு

16 வருடகாலமாக உறையவைக்கப்பட்ட எலிகளின் உடல்களிலிருந்து கலப்பிறப்பாக்கம் செய்யும் முயற்சியில் ஜப்பானிய விஞ்ஞானிகள் வெற்றிபெற்றுள்ளனர். உறையவைக்கப்பட் நிலையில் மர பணுக்கலங்கள் சேதமடைவதால் அத்தகைய உறை நிலை கலங்களைக் கலப்பிறப்பாக்கம் செய்வது சாத்தியமில்லை என நிபுணர்கள் இதுவரை கருதியிருந்தனர்.

எனினும்,ஜப்பானிய கோப் எனும் இடத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆதிகால விலங்குகள் போன்றவற்றின் உறைநிலை எச்சங்களிலிருந்து அவ்விலங்குகளின் சந்ததிகளை உருவாக்குவதற்கு தம்முடைய புதிய தொழில்நுட்பம் வழிவகை செய்யும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.


மேற்படி விஞ்ஞானிகள் 20பாகை செல்சியஸ் உறைநிலையில் பேணப்பட்ட எலி ஒன்றின் மூளைக்கலங்களைப் பயன்படுத்தியே இந்தக் கலப்பிறப்பாக்கத்தை செய்துள்ளனர். இந்நிலையில் கண்டுபிடிக்கப்பட் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காட்டு யானைகளின் உறைநிலை எச்சங்களைப் பயன்படுத்தி, அக்காட்டு யானைகளை மீண்டும் உருவாக்குவதற்கான சாத்தியமுள்ளதாக விஞ்ஞானிகள் குறிபிட்டனர். (ஓ-6)

# ஒபாமாவுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் ஹமாஸ் போராளிகள் அறிவிப்பு

பாலஸ்தீன போராளி குழுவான ஹமாஸ், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவுடன் பேச்சுவார்த்தைக்கு தயாரென அறிவித்துள்ளது.

''இது அரசியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் மாபெரும் மாற்றமாகும். நான் பராக் ஒபாமாவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன்'' என ஹமாஸ் தலைவர் காலெத் மெஷால் ''ஸ்கை நியூஸ்''செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் அரசாங்கமானது ஹமாஸ் குழுவுடனான பேச்சுவார்த்தைக்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)



சீனாவின் குவாங்டொங் மாகாணத்திலுள்ள நான்ஸிங் நகரில் 17 விரல்களுடன் பிறந்த அபூர்வ குழந்தையைப் படத்தில் காணலாம்.

# பயணிகளுக்கான வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் தனியார் பஸ்களில் கஸ்தூரியார் வீதியில் வின்சர் சந்திவரை வாகனங்களை மறித்து ஏறவேண்டாம் என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இருவழிப்பாதையாக உள்ள கஸ்தூரியார் வீதியால் போக்குவரத்து நெருக்கடிகளையும் விபத்துக்களையும் தவிர்க்கும் முகமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

கஸ்தூரியார் வீதியில் வின்சர் சந்தி வரை வாகனத்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-2)

# வீதியை திருத்தியமைக்க மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட அச்சுவேலி கொன்னையன்தூ வீதி கடந்த முப்பது வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளதால் இவ் வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கொன்னையன்தூ பகுதியில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கூடுதலாக உள்ளனர்.

விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு பசளைகள் வாகனங்களில் கொண்டு செல்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்குகின்றனர். இவ்வீதியின் நடுவிலுள்ள பாலமும் திருத்தப்படாத நிலையில் உள்ளது.

இவ் வீதி யால் பயணிப்பதில் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகும் மக்கள் வேறு பாதைகளால் பல சிரமத்தின் மத்தியில் போக்குவரத்துச் செய்வதை காணமுடிகின்றது.

இவ் வீதியை திருத்தி விவசாயிகளின் போக்குவரத்துக் கஷ்டங்கள் நீங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-134)


# காலங்கடந்த பதிவுகளுக்கான நடமாடும் சேவை

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் பிறப்பு , இறப்பு பதிவாளர் பிரிவின் நடமாடும் சேவை நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 2மணிவரை காரைநகர் பிரதேச செயலக கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இச்சேவையில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு,திருமண பதிவுகள் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் சமபந்தப்பட்டவர்கள் குறித்த ஆவணங்களுடன் சமுகமளித்து பயன்பெறுமாறு காரைநகர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-246)

# சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர்




முருகு என்னும் புனை பெயரில் இலக்கிய உலகிற்கு அறிமுகமான ச.முருகையா யாழ்ப்பாண செயலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றி ஓய்வு பெற்று வாழ்ந்து வரும் ஒருவர். இவர் இதுவரை ஆறு இலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளார். தற்பொழுது அவர் எழாவதாக வெளியிட்டிருக்கும் நூல் ''சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர்'' என்னும் கவிதைக் கதை நூலாகும். மருணீக்கியார் (அப்பர் சுவாமிகள்) அக்கா, அருணகிரிநாதரின் அக்கா, பட்டணத்தடிகளின் அக்கா, இராசஇராஜ சோழனின் அக்கா, இராவணனின் தங்கை என ஐந்து பேர்களுக்கும் வாய்த்த சகோதரிகளைப் பற்றி எடுத்தியம்பும் ''இக் கவிதைக் கதை'' நூல் எளிய தமிழில் சிறுவர் முதல் பெரியோர் வரை வாசித்துப் பயன்பெறக் கூடிய முறையில் அமைந்துள்ளது. ''மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது'' என்று இவரது நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருக்கும் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் கூறியிருப்பது இந்நூலுக்கு சாலவே பொருந்தும்.

## நூல் விமர்சனம்

தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையார் அமரர் க.சரவணமுத்து அதிபர் அவர்களுக்கு சமர்ப்பணமாக்கப்பட்டுள்ள இந்நூல் வாஹினி வெளியீட்டகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

முப்பத்திரெண்டு பக்கங்களைக் கொண்ட இந்நூல் எடுத்த சில நிமிட நேரங்களில் வாசித்து முடிக்கக் கூடியது. முருகுவின் இக் கவிதைக் கதை நூலானது இலக்கிய உலகில் அவரின் ஏழாவது பாய்ச்சலாகவே கொள்ளலாம்.

*–அரியாலையூர் சி.சிவதாசன்*

# நீரில் மூழ்கி சிறுவன் பலி

(மல்லாகம்)

குப்பிளானில் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுனம்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளது. இதில் குப்பிளான் கனிச்சங்குளத்தடியைச் சேர்ந்த இரத்தினம் தனுஷ் (வயது 16) என்ற சிறுவனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை நடத்திய மல்லாகம் மேலதிக நீதிவான் பிரேத பரிசோத னைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-ஏ)




# பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

ஒஸ்மானியாக் கல்லூரியின் பரிசுத்தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக பெரிய கடை மொஹறதீன் ஜும்மா பள்ளிவாசல் பிரதம பேஸ் இமாம் மௌலவி எம்.எஸ்.எம்.மன்சூர்,முகம்மதியா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகி ஜனாப் எம்.யூ.எம்.சியானஸ்தாஹீர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.எம்.பாயீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி வன்னியசிங்கம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-2)

# ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பாம்புகள் அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக பாம்புகள் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் புனித -சூசையப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் ஒரு சிறுவனுக்கு பாம்பு தீண்டி யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. தம்பாட்டி கிராமத்தில் ஒருவரின் வீட்டில் ஒரு மாரத்தைச் சுற்றி 57 சிறிய பாம்புகள் காணப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.(ஓ-72)

# பூரணை நிகழ்வும் ஜெயந்தி விழாவும்

கொக்குவில் , தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் பூரணை நிகழ்வும் ஜெயந்தி விழாவும் நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு மானிப்பாய் வீதி தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பஜனை,விசேட ஆன்மீக உரை, அஷ்டோத்திர நாமார்ச்சனை, தீபாராதனை, பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும். (6-2)

# சிறப்பாக இயங்கும் பொது நூலகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கி வரும் பொது நூலகம் தற்பொழுது சிறப்பாக இயங்கி வருகின்றது. சிறுவர் பிரிவு- புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி -பொதுமக்கள் பிரிவு ஆகியன இயங்கி வருகின்றன. அத்துடன் உள்ளூராட்சி வாரத்தையொட்டி முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பொது நூலகத்தால் ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில் நடத்தப்பெற்று சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஓ-72)

# அமரர் தி.மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக புதிய அன்னதான மண்டபம்

(காரைநகர்)

அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிய அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் எழுபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இவ் அன்னதான மண்டபத்தின் நிர்மாண வேலைகள் நிறைவு பெற்று வருவதுடன் இதன் திறப்பு விழா எதிர் வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

இப் புதிய அன்னதான மண்டபம் தொடர்பாக அமரர் தி.மகேஸ்வரன் குடும்பத்தினருடன் தொடர்புகொண்ட போது மேற்படி ஆலயத்தில் உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வதால் அவர்களிற்கான அன்னதான மண்டபம் ஒன்று அமைக்க வேண்டும் என்று அமரர் தி.மகேஸ்வரன் உயிடன் இருக்கும்போது திட்டமிட்டிருந்ததாகவும் அதனாலேதான் அவரின் விருப்பத்தினை ஈடேற்றும் முகமாக எம்மால் இப் புதிய அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ஓ-246)

# அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் ''அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்'' ,''பன்னிரு திருமுறைப் பாராயணம்'' நாளை புதன்கிழமை காலை 7.30 மணி முதல் யாழ்ப்பாணம், கந்தர்மடம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக் கோயிலில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஓ)

# மழை வேண்டி பிரார்த்தனை

(காரைநகர்)

பெரும்போக நெற்செய்கைக்கு மழை வேண்டி காரைநகரில் கொடும் பாவிகள் கட்டி எரித்தும் ஆலயங்களில் பொங்கல், வேள்விகள் செய்தும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

காலபோக நெற்செய்கையில் விதைத்து பயிர் வந்த நேரத்தில் மழைவீழ்ச்சி முற்றாகவே இல்லாதபடியினால் பயிர்கள் கருகி வருவதனை அவதானிக்க முடிகிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெய்வ வேண்டுதலை மேற்கொண்டு வருகின்றனர். காரைநகரில் இம்முறை ஐந்து கமக்காரர் அமைப்பிலுமாக சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-246)

# ஜி.ரி.சற் நிறுவனத்தின் வதிவிடப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கான ஜி.ரி.சற் வதிவிடப் பயிற்சிநெறி நேற்று ஆரம் பமாகி இன்றும் எதிர்வரும் 13,14 ஆம் திகதி களிலும் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4மணிவரை பருத்தித்துறை பிரதேச செய லகத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற வுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கிராமமட்ட தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-3)

# கணனிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவுக்கிளையினால் சனி , ஞாயிற்றுக்கிழமைகளில் கணனிப் பயிற்சி நடத்தப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரிவின் தலைவர் எஸ்.இலங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் நடைபெறுமெனவும் பயிற்சிபெற விரும்புவர்கள் ஆனைக்கோட்டை 3ஆம் கட்டைக்கு அருகாமையிலுள்ள செஞ்சிலுவைச் சங்க பிரிவுக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளனர். (ஓ-134)







வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கத்தினால் நலன் விரும்பிகளினதும் ஒருசில புடைவை வர்த்தகர்களினதும் உதவியுடன் சேகரிக்கப்பட்ட உடுபுடைவைகளை நோயாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வை சங்க நிர்வாக உத்தியோகத்தர் க.நடராசா ஆரம்பித்து உரையாற்றுவதையும், சங்க காரியதரிசி ச.குகதாசன் நோயாளிக்கு புடைவை பார்சல் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்-2009

## நேற்றைய தொடர்ச்சி...

### கமத்தொழில் ஏற்றுமதி வலயங்கள்

கமத்தொழில் உற்பத்திகளை உயர் தர நிர்ணயங்களுடனும் உள்நாட்டு பெறு மதியைச் சேர்ப்பதன் மூலமும் ஏற்றுமதிச் சந்தைக்கு வழங்குவதற்கு கமத்தொழில் கிராமங்களைத் தொடர்புபடுத்திக்கொண்ட ஏற்றுமதி வலயங்களை நிறுவும் ஒரு வேலைத் திட்டத்தை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை முன்மொழிந் துள்ளது.

அதன் பிரகாரம் பனைசார் பொருட்கள், கறுவா, இஞ்சி, குடிநீர், வெனிலா போன்ற தெரிவுசெய்யப்பட்ட பண்டங்கள் இவ் வலயங்களில் உயர் தர நிர்ணயத்தின் கீழ் முன்னேற்றப்பட்டு ஏற்றுமதியாகின்றன. இதற் காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடொன்றை மேற்கொள்வதற்காக நான் முன்மொழிகின்றேன்.

### சனசமூக சுற்றுலா கிராமங்கள்

எமது நாட்டில் சுற்றாடல் மற்றும் கலாசார ரீதியாக கவர்ச்சியைக் கொண்ட பாரம்பரிய கிராமங்களைத் தெரிவுசெய்து, கவர்ச்சிகரமான சுற்றுலா மத்திய நிலையங்கள் முன்னேற்றப்படும் என மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப் படுகின்றது. கம நெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட விசேட கிராமங்களை சுற்றுலா கிராமங்களாக முன்னேற்றுவதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடொன்றை மேற்கொள் வதற்காக முன்மொழிகின்றேன்.

### உலக மரபுரிமையான காலி நகர அபிவிருத்தி

காலி நகரை ஓர் உலக மரபுரிமையாக அபிவிருத்தி செய்வதற்கு நாம் முன்னுரிமையளிக்க வேண்டியுள்ளது. காலித்துறை முகத்தை சுற்றுலா துறைமுகமொன்றாக முன்னேற்றுவதற்காக ஏலவே ஜப்பானினால் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு இணையாக, காலி நகர அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்காக முன்மொழிகின்றேன்.

### படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வீரர்களை மதிப்பிடுதல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அசல் யதார்த்தத்தை விட்டும் தூரவிலகி கொழும்பில் சொகுசாக வாழும் சிலர், எமது படை வீரர்கள் வடக்கில் முன்னெடுத்துச் செல்லும் மனிதாபிமான நடவடிக்கைகளி லுள்ள பயங்கர தன்மையை பெரும்பாலும் குறைத்து மதிப் பிடுகின்றனர். படைவீரர்கள் தமது இன்னுயிரேயே துச்சமென மதித்து, கொடிய பயங்கர வாதத்தைத் தோல்வி யுறச் செய்யும் நிரந்தர நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர். அதன் காரணமாகவே, தெற்கிலும் குறிப்பாக கொழும்பிலும் வாழும் நகர்ப்புற மக்களுக்கு பாதுகாப்புக் கிட்டியுள்ளது. அப்படை வீரர்களினதும் அவர் களின் குடும்பங்களினதும் அர்ப்பணிப்பையிட்டு என்றென்றும் நாம் கடமைப்பட்டுள்ளதைப் போன்றே அதனை அடிக்கடி மதிப்பிட வேண்டியுள்ளது.


மரணம் எய்திய படை வீரர்களை என்றென்றும்நினைவு கூர்வதற்கு படைவீரர் நினைவுச் சின்னமொன்று அமைக்கப்பட் டுள்ளது. படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு வழங்கப்படும் 3,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 5,000 ரூபா வரை அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். இதற்காக, 4,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடொன்றை மேற்கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### படைவீரர் கிராமங்கள்

மஹிந்த சிந்தனையின் கீழ், ரணவிரு கிராமங்களில் 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நாம் வாக்குறுதி அளித்தோம். அதன் முதற்கட்ட நடவடிக்கையாக வீதிகள், நீர், மின்சாரம், தொலைபேசி, வங்கி, வர்த்தக நிலையங்கள், மருத்துவமனை வசதிகள் கொண்ட 1,500 வீடுகளை உள்ளடக்கிய படைவீரர் கிராமமொன்றை இபலோபமவில் நிர்மாணித்தோம். பாதுகாப்பு படைகளில் சேவையாற்றும் வீரர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை களை மேம்படுத்துமுகமாக, மலே வீதியில் கை விடப்பட்டிருந்த பழைய கல்வி அமைச் சுக் கட் டிடம், தற்போது நவீன கல்வி நிறுவனமொன் றாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் பல முழுமையான படை வீரர் கிராமங்களை அமைப்பதற்காக 3,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடொன்றை மேற்கொள் வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### பெறுமதிசேர் வரி (வற் வரி)

பொது பொருளாதார நடவடிக்கைகளுக்



கும் வாழ்க்கைச் செலவிற்கு நிவாரணமொன்றாக பெறுமதிசேர் வரியைக் குறைக்க வேண்டியுள்ளது. ஆகையால், 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலுக்குவருமாறு, நூற்றுக்கு 15 சதவீத பெறுமதிசேர் வரி, நூற்றுக்கு 12 சதவீதமாகக் குறைக்கப்படுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழில்துறை, குத்தகைக் கைத்தொழில் , நிர்மாணக் கைத்தொழில் துறை, காப்புறுதி, தொலைபேசி மற்றும் சகல உற்பத்திகளுக்கும் பாரிய நிவாரணமொன்று கிடைக்கும். அவற்றின் உற்பத்திச் செலவு குறைவடைவதன் மூலம் மொத்த வாழ்க்கைச் செலவும் குறைவடையும்.

எனினும், உந்து ஊர்திகள், சொகுசுப் பண்டங்கள், மதுபானங்களுக்காக நூற்றுக்கு 20 சதவீத பெறுமதிசேர் வரி விதிக்கப்படும். பெறுமதிசேர் வரியின் நிர்வாக அலுவல் களை எளிதுபடுத் துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணமொன்றை வழங்குவதற்கும் பெறு மதிசேர் வரிக்குரிய புரள்வு, 10 இலட்சம் ரூபா விலிருந்து 25 இலட்சம் ரூபா வரை அதி கரிக்கப்படும்.

சனசமூக அடிப்படையிலான அமைப் பாண்மைகள் மூலம் சமூகப் பங்களிப்புடன் இடம் பெறும் கம நெகும, மக நெகும, சமூர்த்தி, சன சமூக நீர் விநியோகக் கருத்திட்டங்களுக் கான நிர்மாணிப்புக்கள் என்பன பெறுமதிசேர் வரியிலிருந்து முற்றாக விடுவிக்கப்படும்.

### பொருளாதார சேவைக் கட்டணம்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

பொருளாதார சேவைக் கட்டணத்தை அமுல்படுத் தும் போது 60 மில்லியன் ரூபா கொண்ட வருடாந்த உயர்ந்தபட்ச வரி எல்லையை 120 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கும் முன் மொழிகின்றேன். இவ் அதிகரிப்பானது, எந்தவொரு வருமான வரியையும் செலுத்தாத பாரியளவு தொழில் முயற்சிகள் மீது மாத்திரம் பாதிப்புச் செலுத்து வதாகும்.

### தொலைபேசி வரி

தற்போது கையடக்கத் தொலைபேசிகள் கம்பி இணைக்கப்படாத தொலைபேசிகள் தொடர்பில் நூற்றுக்கு 10 சதவீத வரியை நிலையான தொலை பேசிகளும் உள்ளடங்குமாறு விரிவுபடுத் தப்படுகின்றது. எவ்வாறாயினும், படை நடவடிக்கைகளின்போது மரணமெய்திய படைவீரர்களின் விதவை மனைவிமாரின் அல்லது வலதுகுறைந்த படை வீரர் களின் வீடுகளிலுள்ள நிலையான தொலைபேசிகளுக்கும் இவ் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

### துறைமுக மற்றும் விமானநிலைய வரி

கௌரவ சபாநாயகர் அவர்களே,

துறைமுக அபிவிருத்திக்காக எமது அரசாங்கம் பாரியதொரு முதலீட்டை மேற்கொண்டு வருகிறது. கொழும்புத்துறைமுகம், அம்பாந்தோட்டை புதிய துறைமுகம், ஒலுவில் புதிய துறைமுகம். திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்தி வேலைகள், காலிசுற்றுலா துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை முன்னேற்றுவ தற்காக 1,000 மில்லியன் டொலர் அளவான முதலீடொன்று தற்போது ஈடுபடுத் தப்பட்டு வருகின்றது.

வீரவிலஇரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை அமுல்படுத்தும் சுற்றாடல் பிரச் சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட் டுள்ளமையால் , அவ்விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. 6துறைமுகங்களையும் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தையும் நிர்மாணிப்பதற்கு வெளிநாட்டு கடன்களுக்கும் கொடைகளுக்கும் புறம்பாக உள்ளூர் ரீதியிலும் ஒதுக் கீடுகள் மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளது. ஆகையால் துறைமுக மற்றும் விமான நிலைய வரியை நூற்றுக்கு 3 சதவீதத்தில் இருந்து நூற்றுக்கு 5 சத வீதம் வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### தேசத்தைக்கட்டி எழுப்புவதற்கான வரி

கௌரவ சபாநாயகர் அவர்களே,

30 ஆண்டுகளுக்கு கூடுதலான காலமாக நீடித்து வரும் பயங்கர வாதப் பிரச்சினை காரண மாக இந்நாடு முற்றாக பின் னடைவுற்றது.

வடக்கு கிழக்குப் பிர தேசங்களில் புகையிரதப் பாதைகள், துறைமுகம், நெடுஞ் சாலைகள், பாலங் கள், அரச நிறுவனங் கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என்பன நிர் மூலமாகின.

அண்டிய பிரதேசங்கள் மக்கள் நடமாற்றம் அற்ற சூனியப்பிரதேசங்களாக மாறின. பாதுகாப்புப்படைகளின் நெஞ்சுர மிக்க கனிசமான வீரர்கள் தமது இன் உயி ரையே தியாகம் செய்தனர். ஒரு சிலர் வலது குறைந்த ஆதரவற்றவர்களாகினர். பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்து தற்காலிக வாழ்விடங்களை அடைந்தனர். கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங் களில் பொதுச்சொத்துக்களும் தனியார் சொத்துக்களும் அளிவுற்றன. வணக்கத்தலங்கள் அழிவைச் சந்தித்தன.

தற்போது அவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு தோன்றியுள்ளது. ஆகையால் அரசியல் தீர்வுகளைத் தேடும் அதேவேளை அபிவிருத்திக்கும் நலன் நோம்புகைக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது. பயங்கரவாதம் காரண மாக அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்ட வடக்கினதும் தெற்கினதும் மக்கள் குறித்தும் பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்டுவதற்கும் தமது இறுதி மூச்சு வரை தம்மை அர்ப்பணித்து இருக்கும் நெஞ்சுரமிகு போர் வீரர்கள் மீதும் அவர்களின் குடும்பங்களின் மீதும் தற்போது கூடுதல் கவனம் செலுத்தப் படவேண்டியுள்ளது.

ஆகையால் பாதுகாப்புப்படைகளின் நலன் நோம்புகைக்கும் பயங்கரவாதம் காரணமாக சிதைவுற்ற மக்கள் வாழ்வையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மீளக் கட்டி யெழுப்புவதற்கும் சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தேசத்தைக் கட்டியெ முப்புவதற்கான வரி ஒன்றை முன் மொழி கின்றேன்.

நூற்றுக்கு ஒரு சதவீதமாக அமையும் இவ் வரியை இறக்குமதிகளுக்கும் உற்பத்திகளுக்கும் வங்கிகள் மற்றும் நிதித்துறை தவிர்ந்த பிற சேவைகளின் புரள்வின் மீதும் இரண்டாண்டு காலத்திற்கு அமுல் படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

இவ் வரியின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு புறம்பாக தேசத்தைக்கட்டி யெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேலதிகக்கொடைகளை பெற்றுக்கொள் வதற்கும் எமது நேச நாடுகளின் உதவி யைக் கோருகின்றோம். இவ் வரிவிதிப்புடன் தொடர்பான சட்ட வரைபை அவசர வரை வொன்றாக இவ்வாண்டிலேயே நிறைவேற் றிக்கொள்வதற்கு மாண்புமிகு பாராளு மன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

### தேசிய வரிக்கொள்கை ஒன்றை வகுத்தல்

1977ஆம் ஆண்டு தொடக்கம் முதலீட்டு ஊக்குவிப்புக்காக வழங்கப்படும் பல்வேறு வரிச்சலுகைகள் காரணமாக எமது வரி முறை அடிப்படை நலிவடைந்துள்ளது. ஒரே பிரதேசத்தில் உள்ள சரி நிகரான வர்த்தகர்களுக்காக சமமற்ற வரிகள் நாட்டில் அமுல் படுத்தப்படுகின்றன.

உள் நாட்டு தொழில் முயற்சியாளர்கள், இரண்டாம் பட்சமான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். காலத்திற்குக் காலம் அறிமுகப் படுத்துப்பட்ட வரி மன்னிப்புச்சட்டங்கள் போன்ற முறைசாரா வேலைத்திட்டங்கள் கார ணமாக வரி நிர்வாகத்திலும் பாரிய சிக் கல்கள் தோன்றியுள்ளன.

தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப வரி நிர்வாகம் நவீன மயப்படுத்தப்படாமையும் மற்றொரு பிரச்சினையாகவுள்ளது. கட்டற்ற வர்த்தக உடன்படிக்கைகள், தீர்வை வரிச் சலுகை போன்ற சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின் ஊடாக தோன்றியுள்ள மாற்றங் கள் காரணமாக உள்நாட்டு உற்புத்தி யாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

வரி நிர்வாகத்திற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள வருமானங்கள் மற்றும் சுங்கத் திணைக் களம் போன்றே பாரியளவில் வரிச் சலுகைகளை வழங்கும் முதலீட்டுச் சபையுடன் இணைந்து ஒருங்கிணைப்பு இன்றியும் செயலாற்றப்படுவதன் காரணமாகவும் வெளிப் படைத்தன்மையற்ற சிக்கலார்ந்த வரி முறை ஒன்று தோற்றம் பெற்றுள்ளது. அவ்வாறே நூற்றுக்கு 50 சதவீதம் அளவான வரி அளவு ஒன்று வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் அமுல் படுத்தப்படுகின்றது.

ஆகையால் சர்வதேச அனுபவங்களையும் கையாண்டு எமது நாட்டில் தேவைகளுடன் இயைபுறும் மக்களுக்கு எளிதான ஒரு வரி முறையை எமது நாட்டில் வகுத்தமைக்கவேண்டியுள்ளது. அதனை வினைத் திறன் வாய்ந்த விதத்தில் நிறை வேற்றுவதற்காக உள் நாட்டு அரசிறைத் திணைக் களத்தையும் சுங்கத் திணைக்களத் தையும் பலப்படுத்தவேண்டியுள்ளது. அவ்வாறே முதலீட்டுச்சபை , ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை போன்ற முதலீடுகளை விஸ்தரிப்பதற்கான நிறுவனங்கள் வரி நிர்வாகத்துடன் ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள் ளப்பட வேண்டியுள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இவ் வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கும் ஓராண்டு காலத்துள் குறித்த முன்மொழிவுகளை வகுத்தமைப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்குமான நடவடிக்கைகளுக்காக 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

## புதிதாக 12 சுதந்திரவர்த்தக வலயங்கள் அமைக்கத் திட்டம்

நாட்டில் மேலும் பன்னிரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இவை பாரிய முதலீட்டு வலயங்களாகவே அமைக்கப்பட வுள்ளன. இந்தத்திட்டத்தின் முதற்கட்டமாக ஐந்து சுதந்திர வர்த்தக வலயங்களின் நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத் திட்டத்திற்காக அரசாங்கம் 11 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. திருகோணமாலை, புத்தளம், தம்புள்ள, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் இப் புதிய சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது. (ஓ-6)

## தமிழக கலைஞர்களுக்கு இலங்கை கலைஞர்களின் திறந்த நிலைக் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் உண்மை நிலையை விளக்கி தமிழக கலைஞர்களுக்கு திறந்த நிலை கடிதம் ஒன்றை அனுப்ப இலங்கை கலைஞர்கள் குழு ஒன்று தீர்மானித்துள்ளது நேற்று முன்தினம் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கலைஞர் விக்கிரமஹே தலைமையி லான குழுவே இந்த முடிவை எடுத்துள்ளது. (ஓ-6)

# இந்தியாவின் அழுத்தத்தினால் மூன்று மாதங்களில் யுத்த நிறுத்தம் ஏற்படுவது உறுதி

## இல்லையேல் பதவி துறக்க தயார் என்கிறார் தயாசிறி எம்.பி.

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற மாற்றுக் குழுவினரும் அரசாங்கத்தை அச்சுறுத்தி யுத்தத்தை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றனர்.

எனினும் இந்தியாவின் அழுத்தத்தினால் மூன்று மாதங்களில் யுத்த நிறுத்தம் வரும். இது நிச்சயம். இதுபொய்யானால் நான் பதவி துறப்பேன் என்று ஐ.தே.க. எம்.பியான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவு திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வரவு செலவுத்திட்டத்தில் முக்கிய உணவுப்பொருட்கள் பலவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. உப்பிற்கான இறக்குமதி வரி 10 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலேயே அம்பாந்தோட்டை உப்பளம் இருந்தது.

எனினும் ஒரு வருடத்திற்கு 6ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இது தேசிய பாவனையில் அரைவாசியாகும். எனினும் உற்பத்திகளை அதிகரிப் பதற்கான வேலைத்திட்டங்கள் எதுவுமே இல்லை. உப்பு இறக்குமதி செய்யப்படுகின்றது. உள்நாட்டில் சிறிதளவு சீனி உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் அதை மேம்படுத்துவதற்கான வழி முறைகள் எதுவுமின்றி இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு வரி அறவிடப்படுகிறது. இதனால் சீனியின் விலை 2 ரூபாவினால் அதிகரிக்கப்படும். அதேபோல் உப்பின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கும்.

இறக்குமதி செய்யப்படும் ஆடைகளுக்கு 50 சதவீதமாக வரி அறவிடப்படுகிறது. இதனால் ஆடைகளின் விலை இரு மடங்காக அதிகரிக்கும்.

இதேபோல விலங்குத்தீவனம் கடதாசிக்கான விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.



அரசாங்கம் வைத்திருக்கும் கடனுக்கான தவணைப்பணத்தை செலுத்துவதற்கு 50கோடி அமெரிக்க டொலரை அரசாங்கம் தேடவேண்டியுள்ளது. தேசப்பற்று என்ற போலி நாடகத்தை நாடி அரசாங்கம் மக்களை கஷ்டத்தில் தள்ளிவிடுவதற்கு முயற்சிக்கிறது.

ஹெல உறுமயவும் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்றவர்களும் மாற்றுக்குழு வாக ஜனாதிபதியைச் சந்தித்து தங்களிடம் 20 உறுப்பினர்கள் இருப்பதாக அரசாங்கத்தை அச்சுறுத்துவது மட்டுமல்ல யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு கூறியுள்ளனர்.

ஆனாலும் இந்தியாவின் அழுத்தங்களின் பேரில் இன்னும் 3 மாதங்களுக்குள் யுத்த நிறுத்தம் ஒன்று வரும் என்பதை இன்றே குறித்து வைத்துக்கொள்ளுங்கள் அது நிச்சயம். அது பொய்யானால் நான் பதவி துறப்பேன்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறே நாம் கோரிக்கை விடுக்கின்றோம். மாறாக புலிகளுக்கு நாட்டை பிரித்துக்கொடுக்குமாறு கூறவில்லை. புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுக்கும் அதேநேரத்தில் அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டும். உலக நாடுகளும் அரசியல் தீர்வையே வலியுறுத்துகின்றன. தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களிடையே ஒற்றுமை அவசியம். அதனை விடுத்து பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவியும் கருணாவிற்கு எம்.பிப்பதவியும் வழங்கிவிட்டு தமிழ் மக்களுக்காக தாங்களே பாடுபடுவதாக காண்பித்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது.

முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப்பதவியைக் கொடுத்துவிட்டு முஸ்லிம் மக்களுக்காக தாங்களே பாடுபடுவதுபோலவும் காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றது.

அப்படி அரசாங்கம் நினைத்தால் அது தவறாகும். அரசாங்கத்திற்கு எதிராக முஸ்லிம்கள் வீதியில் இறங்கினர் இந்த அரசாங்கம் தான் இனங்களை தூண்டி விடுவதற்கு முயற்சிக்கின்றது.

ஹெல உறுமய ஜே.வி.பியிலிருந்து விலகிச்சென்றவர்களை இணைத்துக் கொண்டு தன்னைத்தானே பலிகொடுத்துக் கொள்ளப் போகின்றதா என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். (ஓ-6)

# நாட்டின் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக பிரபாகரன் திகழ்வதாக தெரிவிப்பதால் பெருமை

## என்கிறார் கூட்டமைப்பு எம்.பி. பத்மநாதன்

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியார்? என்பதையும் நாட்டில் அரசியலையும் தீர்மானிக்கும் சக்தியாக பிரபாகரன் இருப்பதாக ரணில் விக்கிரமசிங்கவும் விமல் வீரவன்சவும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பிரபாகரனின் சக்தியையிட்டு கூட்டமைப்பு பெருமைகொள்கின்றது என்று தமி ழ்த்தேசியக்கூட்டமைப்பின் எம்.பியான பத்மநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை இடம் பெற்ற வரவு-செலவுத்திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

வரவு -செலவு திட்டத்தில் 177 பில்லியன் ரூபா யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியுள்ள போதும் அரசாங்கத்தினால் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர முடியுமா?

கொடூரமான யுத்தம் நாட்டின் வளங்களை அழிக்கும், பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. எத்தனை எத்தனையோ உயிர்கள் பலியாகின்றனர். அபிவிருத்திக்காக ஒதுக்கப்படவேண்டிய பணங்கள் யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்டு வீணாடிக்கப்படுகின்றன.

யசீர் அரபாத்தை போராளியாகவும், பிடல் காஷ்ரோ, நேதாஜி ஆகியோரை விடுதலைப் போராட்ட வீரர்களாக காண்கின்றீர்கள்.

ஆனால் தன் இனத்தின் விடுதலைக்காக 30 வருடங்கள் போராட்டம் நடத்தி வரும் பிரபாகரனை மட்டும் ஏன் ? பயங்கரவாதி என்கிறீர்கள். புலிகளை ஒருவராலும் வெல்ல முடியாது என்பதனால் பாடசாலை மாணவர்கள் புலிகளின் பதுங்கு குழிகளாகவும் , மக்களின் வீடுகள் ஆயுதக்கிடங்குகளாகவும் உங்களுக்குத் தெரிகின்றன. அதனால்த்தான் கண்மூடித்தனமான முறையில் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றீர்கள்.

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியவர் பிரபாகரன் என்று ரணில் விக்கிரமசிங்கவும் , வரவு -செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பிரபாகரன் திட்டமிட்டுள்ளதாக விமல் வீர வன்ச கூறுகின் றார்.

நாட்டையும் அரசியலையும் ஜனாதிபதி யார் என்பதைக்கூட தீர்மானிக்கும் சக்தியாக பிரபாகரன் திகழ்கின்றார் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கின்றீர்கள். அதனையிட்டு கூட்டமைப்பு பெருமைகொள்கின்றது. (ஓ-6)

# போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கிழக்கு மாகாண இயல்பு நிலை பாதிக்கப்படும்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான்

(கொழும்பு)

இந்தியாவின் அழுத்தத்திற்கு இணங்க போர் நிறுத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டால் அது கிழக்கு மாகாணத்தின் இயல்பு நிலையை பாதித்துவிடும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படாததால் கிழக்கின் இயல்பு நிலை குறித்து இந்தியத் தலைவர்கள் போதிய அளவு அறிந்துகொள்ளவில்லை.

கிழக்கில் ஏற்படும் மாற்றங்கள் சரியான முறையில் வெளிக்கொணரப்படுவதில்லை. இந்தப்பின்னணியிலேயே இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகிறது என சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கை வந்த இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திப்பதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

எனினும் இந்தியப் பிரதமர் பிள்ளையானை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கி கொடுத்திருக்கவில்லை.

எனினும் இந்தியாவின் அழுத்தங்களுக்கு உட்பட்டு போர்நிறுத்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுமாயின் தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் காணப்படும் சுமூக நிலை மாறி பழைய நிலைக்கு கிழக்கு மாகாணம் சென்றுவிடும் என கல்முனையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பொழுது அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடபகுதியில் நடைபெற்று வரும் மோதல்களை நிறுத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவேண்டும் என தமிழகக் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்



சிகளில் இந்திய மத்திய அரசாங்கம் மத்தியஸ்தம் வகிக்க தயார் என தமிழக கட்சிகள் முன்னர் அறிவித்திருந்தனர்.

எனினும் இலங்கை ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக பசில் ராஜபக்ஷ புது டில்லி சென்று திரும்பியதும் இலங்கை விட யத்தில் இந்தியாவின் தலையீடு பற்றி தமிழக ஆளும் கட்சி எவ்விதமான கருத்துகளையும் வெளியிடவில்லை. மாறாக வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்களை அனுப்பிவைக்க தமிழக மற்றும் இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஓ-6)

# முஸ்லிம்களின் ஹர்த்தாலுக்கு பின்னணியில் வெளிநாட்டு சக்தியா? பொலிஸார் விசாரணை

கடந்த வெள்ளிக்கிழமையன்று கொழும்பு மருதானையிலும் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் கடை யடைப்பு நடவடிக்கைகள் வெளி நாட்டு சக்தி ஒன்றின் தலையீட்டில் நடைபெற்றிருக்கலாம் என்றும் தன்னார்வு நிறுவனம் ஒன்று இதற்கு உதவியிருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து இது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஹெல உறுமயவை பிரதிநிதித்து வப் படுத்தும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க முஸ்லிம்களுக்கு எதிராக விமர்சனங்களை வெளியிட்டார். என்ற குற்றச் சாட்டை முன்வைத்தும் முஸ்லிம் மாணவிக ளுக்கான பர்தா ஆடை களை சிங்கள பாடசாலைகள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன என்றும் குற்றம் சுமத்தியே இந்த ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஹர்த்தால் காரணமாகவே மூடப்பட்ட சில வியாபார தளங்களை பொலிஸார் பலாத்காரமாக திறந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்ததாக கூறப்படும் முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் முஜிபுர் ரஹ்மானை கைது செய்யுமாறு சிங்கள அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஹர்த்தால் தினத்தன்று சிங்கள வியாபாரத்தளம் ஒன்று தாக்கப்பட்டமைக்கு இவரே காரணம் என சிங்கள அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

ஊழியத்திலும் அநுதாபமே அதிக உதவி அளிப்ப தாகும்.

~ ஆவ்பரி

வலம்புரி

## தமிழகத்தின் எழுச்சிக்கு தகுந்த பதில் கொடுத்தேயாக வேண்டும்

தமிழகத்தில் எம் உடன் பிறப்புக்களின் துடிப் புக் கண்டு உலகமே கதிகலங்க வேண்டும். தமிழன் அநாதை அல்ல என்ற செய்தி இப்போது எல்லோருக்கும் வலுவாக ஊட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் பூர்வீகம் என்பது இந்தியாவை அடிப்படையாகக் கொண்டதென்னும் உண்மையை மறுப்பதற்கில்லை.

அதேநேரம் இந்தியாவைப் புறந்தள்ளி விட்டு இலங்கை சீவியம் நடத்துவதென்பதும் முடியாத காரியம்.

இந் நிலையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் மூண்டுள்ள யுத்தம் தமிழகத்தில் பெரும் எழுச்சியை தோற்றுவித்துள்ளது. தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் ஈழத் தமிழர் ஆதரவலை வீசுகின்றது.

இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதே அனைவரினதும் குரலாக இருக்கும் போது, அதற்குத் தகுந்த பதிலை இலங்கை அரசு வழங்கியாக வேண்டும் என்பதில் ஐயமில்லை.

யுத்தத்தின் கொடூரத்தால் ஈழத் தமிழர் படும் துயர் தமிழக முதல்வர் கருணாநிதியின் பதவியையே ஈடாட வைக்கின்றது. ஒரு கட்டத்தில் தனது பதவியை இராஜினாமாச் செய்ய முதல்வர் கருணாநிதி எண்ணியதாக வெளிவந்த செய்தி இங்கு நோக்குதற்குரியது.

அத்தகையதோர் செய்தியை கலைஞர் தேவை கருதி வெளியிட்டிருந்தாலும் கூட அது பொருத்தமுடையதாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

எனவே தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத் தமிழர் ஆதரவலைக்குத் தகுந்த பதில் வழங்கப்படாத விடத்து மத்திய அரசு கூட கவிழ்ந்து போகும் நிலை ஏற்படலாம்.

இந் நிலையில் ஏதோவொரு வகையில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டிய தேவையுண்டு. அந்தத் தலையீட்டின் ஆகக் குறைந்த விடயம் யுத்த நிறுத்தமாக இருக்க வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசும் தனது போர் மூச்சைக் கைவிட்டு இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முன் வர வேண்டும்.

போரில் வெற்றியடைகின்றோம் என்ற முடிபு தற்காலிகமானது. இதற்கு இலங்கையின் யுத்த வரலாறு நல்லதோர் படிப்பினை. யுத்தத்தில் எந்தத் தரப்பும் வெல்லும் சாத்தியமில்லை என்பதையே கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் முடிபுகள் உறுதி செய்கின்றன.

ஆகவே இலங்கை அரசு, தற்போது இருக்கக் கூடிய இந்தியாவின் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு இலங்கைத் திருநாட்டில் சமாதானத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் கூட்டமைப்பினரின் ஆலோசனை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க


(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான அணுகுமுறை ஊடாகவே தீர்வை காணமுடியும். இதற்கு பிரதான அரசியல் கட்சிகளின் ஒருமைப்பாடு அவசியம் என்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யோசனைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்று முன்தினம்நடைபெற்ற சர்வ தேச கராத்தே போட்டியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் பேசுகையில்,

தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலான சகல நடவடிக்கைகளும் முடிவுறாத நிலையில் தொடர்ந்து கொண்டிக் கின்றன. இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கென ஜனாதிபதியிடமிருந்து எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனடிப் படையில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் தீர்வினை எட்டுவதற்கு சர்வ கட்சிக் குழு வின் ஆலோசனைக ளுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.



தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படு வதில் ஐக்கிய தேசியக்கட்சி மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றது. இது விடயத்தில் எமது நிலைப்பாடுகள் குறித்து சர்வ கட்சிக் குழுத்தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரணவிடம் கையளித்துள்ளோம்.

பிரச்சினைக்கு தீர்வு காணும் போது அரசாங்க கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு ஸ்திரமான ஒருமைப்பாட்டுக்கு வருகின்ற அதேவேளை, தமிழர் பிரச்சினையுடன் நெருங்கிய தொடர்புடைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் உள்வாங்கப்பட வேண்டும். அக்கட்சியின் ஆலோசனைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மூன்று கட்சிகளும் முதலில் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதன் அடிப்படையில் ஏனைய அரசியல் கட்சிகளையும் இந்த பயணத்தில் இணைத்துக்கொள்ளமுடியும் என் பதனையும் தெளிவாக எடுத்துக்கூறினேன். (ஓ-6)

# இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தமான நாடு முஸ்லிம்களோ தமிழர்களோ உரிமை கோர முடியாது

## பகிரங்க விவாதத்துக்கு அழைப்பு விடும் தேசிய சங்க சம்மேளனம்

(கொழும்பு)

இலங்கையென்பது சிங்களவர்களுக்கே உரித்தான நாடு. இங்கு சிறுபான்மையினருக்கு உரிமை இல்லையென் பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

உரிமை குறித்து உறுதிப்படுத்தத் துடிக்கும் எவருடனும் பகிரங்க விவாதத்துக்குத் தயார் என்று தேசிய சங்க சம்மேளனத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் மிஸ்ஸக கமலஸ்ரீதேரர் தெரிவித்தார்.

வடக்கின் பயங்கரவாதத்தைப் போன்று தெற்கிலும் ஒரு பயங்கரவாதம் உருவாகிக் கொண்டு வருகின்றது. இதற்கு மூல காரணமான பாதாள உலகத்தைச் சேர்ந்த முஸ்லிம் தீவிர வாதிகளை உடனடியாக சிறைப்படுத்தித் தண்டிக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு - 7 இல் அமைந்துள்ள மஹா வலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார்.இங்கு அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பாதுகாப்பு மற்றும் கலாசாரம் தொடர்பில் அமைச்சர் சம்பிக்கவின் கருத்துக்களில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. பௌத்த பாடசாலைகளுக்கென்று ஒரு தர்மம், கலாசாரம் இருக்கின்றது. இதனை மீறுவதற்கு இடமளிக்க முடியாது.

பௌத்த கலாசார வலியுறுத்தல் மற்றும் எமது நாட்டின் உரிமை தொடர்பில் தெளிவற்ற தன்மையினாலேயே கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் பாதாள உலகப் பிரிவினரால் ஆர்ப் பாட்டமும் மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டிருக் கின்றன.

முஸ்லிம்களோ தமிழர்களோ இந்த நாட்டில் உரிமை கோர முடியாது. இது சிங்களவர்களுக்கே சொந்தமான நாடு. சிங் கள நாட்டை உரிமை கொண்டாட அவர்களுக்கு உரிமை இல்லை.

வரலாற்று உண்மை குறித்து பேசுகின்ற சிறுபான்மையினத்தவர்கள் எவராக இருந்தாலும், இந்த நாடு யாருக்குச் சொந்தம் என்பதை உறுதி செய்து கொள்ளும் ஒரு பகிரங்க விவாதத்துக்கு அழைப்பு விடுக்கிறேன்.

நாடு இன்று முக்கியமான ஒரு தருணத்தை எட்டியிருக்கின்றது. வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து பல சவால்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத் தில் வடக்கில் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தையும் நடத்திக் கொண்டிருக்கின்றது.

வடக்கின் பயங்கர வாதத்தை தெற்கிலும் ஏற்படுத்துவதே முஸ்லிம்களின் தேவையாக இருக்கின்றது.

தெற்கில் பயங்கரவாத நிலையைத் தோற்றுவித்து அதன் மூலமாக அரசாங்கத்தை தர்மசங்கடத்துக்குள் தள்ளி விடுவதும், அத்துடன் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குமான முயற்சியே இடம் பெற்று வருகின்றது. (ஓ-6)

# வரவு செலவுத்திட்ட இறுதி வாக்கெடுப்புக்கு முன் அரசு பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்

## கபீர் ஹாசீம் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டத்தினைத் தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது. வரவு-செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்புக்கு முன்னர் அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்கொள்ளும். அதிர்ச்சிகளும் அரசாங்கத்திற்குக் காத்திருக்கின்றன என்று ஐ.தே. கவின் கேகாலை மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே கபீர் ஹாஸிம் எம்.பி. மேற் கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது,

"அரசாங்கத்தினால் முன்வைக் கப்பட்டிருக்கின்ற வரவு-செலவுத் திட்டமானது அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் சாதாரண பொது மக்களைப் பொறுத்த வரையில் அவர்களி டம் இருக்கின்ற சிறிதளவு சேமிப்புக் களையும் உறிஞ்சு கின்ற ஒரு திட்டமே முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

3 ஆயிரம் கோடி ரூபாவை விழுங்கியுள்ள மிஹின் எயார் சேவையை புதுப்பிக்க 6 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கின்ற மஹிந்த சிந்தனை சிறு உற்பத்தியாளர் களுக்கு எதைக் கொடுத்திருக்கின்றது.

2008 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்திலும் கூட எந்தவித நிவாரணங்களையும் வழங்காத அரசாங்கம் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வரிச்சுமையை அதிகரித்திருப்பது மட்டுமே மிகுதியாக இருந்திருக்கின்றது. 2004 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட மஹிந்த சிந்தனை இன்று வரையில் எதனைச் சாதித்திருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி கேட்க விரும்பு கின்றது. -வெளிநாடுகளில் இருந்து பெறப்படுகின்ற அதிகமான வட்டிகளுக்கான கடன்கள், உள்நாட்டில் சகல வங்கிகளிலும் பெறப்பட்டிருக் கின்ற கடன்களால் எழுந்திருக்கின்ற சுமைகள் பொதுமக்களின் மீது சுமத்தப்பட்டிருக் கின்றன. இது விடயத்தில் மத்திய வங்கி அரசியல் மயப்படுத்தப் பட்டு வருகின்றது.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் கடலால் சூழப்பட்டுள்ள எமது நாட்டில் உப்பு உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள தடுமாறி வருகின்ற அரசாங்கம் வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்யும் உப்புக்கு வரி விதிப்பதானது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இந்நிலையில் அரசாங்கத்திற்கு சில அதிர்ச்சிகளும் காத்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற 18 பேர் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் தீர்ப்புகள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் பாராளுமன்றத்தில் எதிர்பாராத மாற்றங்களும் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கின்றது. எவ்வாறிருப்பினும் வரவு-செலவுத்திட்ட இறுதி வாக்கெடுப்பிற்கு முன்னர் அரசாங்கம் பாரிய சவால் களை எதிர்கொள்ளும். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி செயல்புரியும் விதம்




சுயநல நோக்கம் எதுவும் இல்லாமல் ஒருவன் வேலை செய்தால் அவனுக்குக் கிடைக்கும் பலன் எதுவுமே இல்லையா? இருக்கிறது. உண்மையில் மிகவுயர்ந்த பலனை அடைபவன் அவன்தான். சுயநலமின்றி வேலை செய்வது தான் மிகுந்த பலனைத் தருவது . ஆனால் அவ்வாறு வேலை செய்வதற்கான பொறுமை மக்களிடம் இல்லை. பலன் கருதாமல் செயல்புரிவது உடல் நலத்திற்கும் மிகுந்த நன்மை செய்கிறது. அன்பு, உண்மை, சுய நலமின்மை இவையெல்லாம் ஒழுக்கம் பற்றிய வெறும் பேச்சுக்கள் அல்ல ; அவை நம் மிடம் மிக உன்னதமான இலட்சியத்தை உருவாக்குகின்றன. ஏனெனில் அவற்றிலிருந்து தான் அளவற்ற ஆற்றல் வெளிப்படுகிறது. வேதாந்தத்தின் இலட்சியமான உண்மையான செயல் நிலை என்பது, என்ன நடந்தாலும் சம நிலை குறையாத, கலங்காத, நிரந்தரமான, அமைதியுடன் இணைந்தே இருக்கும். இதுவேசெயல் புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த கருத்து என்பதை நமது அன்றாட வாழ்க்கை அனுபவத்தின் மூலம் நாம் உணரலாம்.

# முதல்வரின் தொடர் அறிக்கைகளின் விளைவே விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு

## திராவிட கழகத் தலைவர் வீரமணி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையில், இலங்கையில் போர் நிறுத்தத்தை செய்யுமாறு இலங்கைஅரசை இந்திய அரசு வலியுறுத்த



வேண்டும் என திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி வலியுறுத் தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது, போர் நிறுத்தத்திற்குத் தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் அறிவித் திருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும்! முதல்வர் கலைஞர் தம் அயராத முயற்சி களுக்கு விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து ஏற்பட்ட சாதகமான விளைவு இது என்றே சொல்லலாம்.

2002 இல் விடுதலைப் புலிகள் தங்கள் தரப்பிலிருந்து போர் நிறுத்தத்தை அறிவித்த பிறகே,ஓராண்டுக்கு பின்னர் சிங்கள அரசு, பன்னாட்டு அழுத்தம் காரணமாகவே போர் நிறுத்தம் செய்தது. தமிழ்நாட்டில் எழுந்துள்ள எழுச்சியையொட்டி முதல்வர் கலைஞர் விடுத்துவரும் தொடர் அறிக்கைகளின் விளைவாகவே, விடுதலைப்புலிகள் இந்த நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டியுள் ளனர்.

வழக்கம்போல இருக்கின்ற இலங்கை அரசாங்கத்தின் ஆதரவான இரவல் குரல் சக்திகள், சில ஊடகங்களின் ஊடாக் இதனைக் கொச்சைப்படுத்தி புலிகள் வலுவிழந்து விட்டனர் என்று பிரசாரம் செய்யக் கூடும். அலட்சியப்படுத்த வேண்டிய இந்த அற்பங்களைப்பற்றிக் கவலைப்படாமல், அங்கு சொந்த மண்ணில் சோற்றுக்கு வழி இன்றி, குண்டு மழைகளிலிருந்து தப்பிக்க காடு, வனாந்திரங்களில் அலையும் தமிழர்கள், குழந்தை குட்டிகளுடன் ஊருக்கு திரும்பிட வசதி செய்ய இந்த நல்லெண்ணம் இலங்கை அரசால் எதிர்கொள்ளப்பட வேண்டும். அதை வலியுறுத்த நமது மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது.

நமது பிரதமரை நாளை மறுநாள் வியாழக்கிழமை சந்திக்க வரும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் எடுத்துக்கூறி வற்புறுத்த வேண்டும்.

போர் நிறுத்தம், நிரந்தர அமைதி இவை பிரதமரால் வலியுறுத்தப்பட்டு அங்கு அரசியல் தீர்வு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும். (ஓ-6)

# இலங்கைத் தமிழர் நிவாரணநிதிக்கு காங்கிரஸ் சார்பில் ரூ.5இலட்சம்

(சென்னை)

ராஜீவ் –ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் மூலமே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார். முதல்வர் கருணாநிதியை சென்னையில் அவரது வீட்டில் சென்று சந்தித்த தங்கபாலு மற்றும் சுதர்சனன் இலங்கை தமிழர் நிவாரண நிதிக்காக காங்கிரஸ் கட்சி சார்பில் ரூபா 5 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

இந்த சந்திப்பின் போது 4 நாட்களுக்கு முன்னதாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து பேசியதாக முதல்வரிடம் தெரிவித்தார். பின்னர் செய் தியாளர்களிடம் பேசிய தங்கபாலு, ராஜீவ் –ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் மூலமே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இலங்கைத்தமிழர் நிவாரண உதவிகள் சரியாக சென்றடைகிறதா என்பதை இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலம் கண்காணிக்கப்படும் என்றார். (ஓ-6)

# ராஜீவ் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை - திருமாவளவன்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைக்கு விடு தலைப் புலிகள் காரணம் அல்ல என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் கூறினார்.

சென்னைய்யில் சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு சார்பில் நேற்று முன் தினம் நடந்த உண்ணாவிரதப் போராட் டத்தில் கலந்து கொண்ட திருமாவளவன் பேசியதாவது,

மறைந்த தலைவர் ராஜீவ் காந்தியின் படுகொலை தான் இலங்கைப்பிரச்சினை நீடிக்க காரணம் என்று ஒரு சாரார் சொல்கிறார்கள் . அது உண்மை அல்ல. ராஜீவ் காந்தி இளமை மிக்க தலைவராக இருந் தார். துடிப்பு மிக்கவராக இருந்தார். சர்வதேச . அளவிலான தலைவர் களின் ஆற்றல் மிக்க தலைவராக இருந்தார்.

அவர் இந்த தமிழ் மண்ணில் படுகொலை செய்யப்பட்டதை யாருமே நியாயப் படுத்தவில்லை. மறைந்த தளபதி கிட்டு ராஜீவ்காந்தி படுகொலை நடந்த நேரத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில் அவர் ராஜீவ்காந்தி கொலைக்கும் விடு தலைப் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறியிருந்தார். அவர் சென்னது சரி என்று நான் அடித்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்திராகாந்தி படுகொலையில் எப்படி அமெரிக்க உளவுத் துறையின் பங்களிப்பு இருக்கிறதோ , அதேபங்களிப்பு ராஜீவ் காந்தி படுகொலைக்கான பின்னணியிலும் இருக்கிறது.

ராஜீவ்காந்தி படுகொலையை தமிழ் நாட்டில் அமெரிக்க உளவுத்துறையினர் நடத்திய தன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்திருக்கிறார்கள். ராஜீவ் செயல்மிக்க தலைவராக இருந்ததால் அமெரிக்கா சொல்வதையெல்லாம் கேட்கக் கூடிய தலையாட்டி பொம்மையாக இல்லை. அமெரிக்க விமானப் படை ஈராக்கை தாக்கிய நேரத்தில் அந்த விமானங்கள் இந்தியாவில் இறக்கி எரி பொருள் நிரப்ப அவர் சம்மதிக்கவில்லை.

ராஜீவ் மீண்டும் பிரதமராகி விட்டால் அமெரிக்காவுக்கு ஒத்துழைக்க மாட்டார். மீண்டும் ஈழப் பிரச்சினையில் தலையிடுவார். அதற்கு பிறகு அமெரிக்கா திருகோண மலையில் இராணுவதளம் அமைக்கும் எண்ணத்தை செயல் படுத்த முடியாது போய் விடும். தெற்காசிய நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைக்க முடியாமல் போய் விடும். இந்த பயமே கொலைத் திட்டமானது.

ராஜீவ்காந்தியை தங்கள் நாட்டுக்கு இலங்கை அரசு அழைக்கிறது. அவரும் போகிறார். இராணுவ அணிவகுப்பு மரி யாதை ஏற்றுக்கொண்டிருந்த நேரத்தில் ஒரு சிங்கள சிப்பாய் துப்பாக்கிக் கட்டையால் தாக்க முயற் சித்த போது குனிந்து உயிர் தப்பினார்.

ஆனால் அந்த சிப்பாய் ஒரு மன நோயாளி என்பதாக சொல்லி இலங்கை அரசு அந்தப் பிரச்சினையை அப்படியே விட்டுவிட்டது. சிங்கள சிப்பாயின் அந்த கொலை முயற்சிக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பது கடைசி வரை மறைக்கப்பட்டு விட்டது.

காங்கிரஸ்காரர்களை விட இந்த தேசத்தை நாம் அதிகமாகவே நேசிக்கிறோம். கன்னி யாகுமரியில் இருந்து இமயம்வரை எங்கள் தேசம். இதை நாங்கள் பகைக்கவோ, பழிக்கவோ விரும்பவில்லை. அதில் உள்ள ஒரு இனம் அழிக்கப் படுவதைத் தான் ஏற்க முடியவில்லை.

இனப்படுகொலை பட்டவர்த்தனமாக நடப்பதை வேடிக்கை பார்க்க முடியாது. நானோ நீங்களோ ஆதரிக்கும் நிலை யில் இன்று விடுதலைப்புலிகள் இல்லை. அவர்கள் எங்கோபோய் விட்டார்கள். இந்திய அரசு சிங்கள அரசுக்கு உதவிசெய்யாமல் விலகியிருந்தாலே போதும் என்றார். (ஓ-6)

# ஈழத்தமிழர்களின் அமைதியான வாழ்வுக்கு தனிநாடு அவசியம்

## மதுரை ஆதீனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு தனி நாடு கிடைத்தால் தான் நல்வாழ்வு பிறக்கும். அதை விடுதலைப் புலிகளால் தான் பெற்றுக் கொடுக்க முடியும் என மதுரை ஆதீனம் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் போர் நிறுத்தம் கொண்டு வர சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மதுரை ஆதீனம்சேலத்தில்நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது,

தமிழக அரசும், இந்திய அரசும் ஒன்று கூடி இலங்கை பிரச்சினை பற்றி ஆலோசித்து ஒரு நல்ல முடிவு எடுத்து செயற்படுத்தினால் தான் அங்கு அமைதியை காண முடியும்.

தமிழ் ஈழ மக்கள் அமைதியாக வாழ தனி நாடு ஒதுக்கி கொடுக்க வேண்டும். அப்படி தமிழ் ஈழ மக்களுக்கு தனி நாடு கிடைத்தால் தான் அவர்கள் நல்வாழ்வு பெற முடியும். அந்த தனி தமிழ் ஈழத்தை விடுதலை புலிகளால் தான் பெற்று தர முடியும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

இலங்கை தமிழர் பிரச்சினையில் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும். அங்குள்ள மக்கள் நல்வாழ்வு பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழ் இனம் அழிப்பதை தடுக்க அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும். (ஓ-6)

# ஈழத்தமிழர்கள் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்கள்

## பா.ஜ.க.தேசியச் செயலாளர் எஸ்.திருநாவுக்கரசு

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கா விட்டால் இந்தியாவுக்கும் பல பாதிப்புகள் ஏற்படும் என பா.ஜ.க. தேசியச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சின்னத்திரை கலைஞர்களின் உண்ணா விரதப் போராட்டத்தை தொடக்கி வைத்து அவர் பேசிய போது,

தற்போது இங்கு 1 இலட்சம் அகதிகள் உள்ளனர். அவர்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பில் நாம்தான் உள்ளோம் அந்த வகையில் இது இந்தியாவின் பிரச்சினையும் கூட ஈழத் தமிழர்கள் தமிழகத்தோடு பூகோள ரீதியாக வரலாற்று ரீதியாக மொழி இனம் கலா சாரம் பண்பாட்டு ரீதியாக நெருங்கிய தொடர்புடையவர்கள் அத்தகைய மக்கள் மீது அந்த நாட்டு அரசே குண்டு வீசித் தாக்குவதை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக முன்பு பா.ஜ.க. நிவாரணப் பொருட்களை திரட்டி யது. பழ. நெடுமாறன் போன்றவர்களுக்கும் திரட்டினார்கள்.

ஆனால் அந்தப் பொருட்களை இலங்கையில் வாடும் தமிழ் மக்களுக்கு அனுப்ப அனுமதிக்க முடியாது என மத்திய அரசு மறுத்து விட்டது.

இப்போது திரட்டப் படும் நிவாரணப் பொருட்களையாவது செஞ்சிலுவைச் சங்கம் ஐ.நா. மனித உரிமை கவுன்சில் மூலம் ஈழத் தமிழர்களுக்கு சென்று சேர்வதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றார் அவர். (ஓ-6)

# இலங்கை கடற்படையினர் எச்சரிக்கை விடுக்காமலேயே துப்பாக்கிச்சூடு நடத்தினர்

## காயமடைந்த நாகை மீனவர் தெரிவிப்பு

(தஞ்சாவூர்)

அதிவேக கப்பலில் வந்த இலங்கைக் கடற்படையினர் 20-30 மீற்றர் தூரத்தில் இருந்து முன்னெச்சரிக்கை எதுவுமின்றி சரமாரியாக சுட்டனர் என கடந்த வெள்ளிக் கிழமையன்று இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி காயமடைந்த நாகை மீனவர் பாபு (வயது 30) தெரிவித்துள்ளார்.

நாகை அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 5ஆம் திகதி இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படை யினர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

இதில் மீனவர் பாபு காயமடைந்தார். தற்போது தஞ்சை மருத்துவ கல்லூரியல் சிகிச்சை பெற்று வரும் பாபு இச்சம்பவம் குறித்து கூறுகையில்,

கடந்த புதன்கிழமை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாம் வெள்ளிக்கிழமை மாலை சுமார் 6 மணி அளவில் கோடியக் கரை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் சுமார் 20-30 மீற்றர் தூரத்தில் இருந்து எச்சரிக்கை கொடுக்காமல் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் எனக்கு காலில் குண்டடி பட்தால் நான் தவறி படகுக்குள் விழுந்தேன்.

இலங்கை கடற்படையினர் தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருந்ததால் என்னுடன் வந்த மற்ற மீனவர்கள் 5 பேரும் படகுக்குள் குனிந்து கொண்டனர்.

கடல் காற்று பலமாக வீசிய நிலையில் 7 மணி நேரம் பயணம் செய்து நாகப் பட்டினம் கரையை வந்தடைந்தோம் என்கிறார்.

இச்சம்பவம் தொடர்பாக தனி நபர் விசாரணைக் குழு அமைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

மேலும் இச்சம்பவத்தில் இலங்கை கடற்படையினருக்கு எவ்வித தொடர்புமில்லை என சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் கூறியுள்ளது. (ஓ-6)

# போர்டர்-கவாஸ்கர் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றியது




(நாக்பூர்)

சுழல் நாயகர்களின் துல்லியமான பந்து வீச்சால் நான்காவது டெஸ்டில் 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்ட இந்திய அணி போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணி போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இத் தொடரில் முதலாவது மற்றும் மூன்றாவது டெஸ்ட் சமநிலையாக இரண்டாவது டெஸ்டில் வென்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந் நிலையில் தொடரின் தீர்க்கமான 4 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 6 ஆம் திகதி நாக்பூரில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 441 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டெண்டுல்கர் 109 ஓட்டங்களையும் கங்குலி 85 ஓட்டங்களையும் சேவாக் 66, லக்ஷ்மன் 64 மற்றும் தோனி 56 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அறிமுக வீரர் கிரஜ்ஜா 8 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன், வோட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 355 ஓட்டங்களை எடுத்தது.

## அவுஸ்திரேலிய அணி பரிதாபம்

இதில் ஹட்டிச் 102 ஓட்டங்களையும் ஹசி 90 ஓட்டங்களையும் வைற் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, மிர்ஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர்க்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்சில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 295 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் வெற்றி இலக்காக 382 ஓட்டங்களை நிர்ணயித்தது இந்திய அணி. இதில் சேவாக் 92 ஓட்டங்களையும் தோனி 55, ஹர்பஜன் சிங் 52 ஓட்டங்களையும் அறிமுக வீரர் விஜய் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தொடர்ந்து 382 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது 2-வது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 5-வதும் இறுதியுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது. மேலதிகமாக 16 ஓட்டங்களை எடுத்த நிலையில் அணி 29 ஓட்டங்களை எடுத்தபோது ஹட்டிச் 16 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் வந்த வேகத்திலேயே 8 ஓட்டங்களை எடுத்தபோது மிர்ஷாவினால் ரன் அவுட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலிய அணி அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து 37 ஓட்டங்களை எடுத்த நிலையில் 3-வது விக்கெட்டுக்காக ஹைடனுடன் இணைந்த கிளார்க் ஓரளவு நம்பிக்கையளித்தார்.

மறுமுனையில் ஹைடன் அதிரடியாக ஆட அவுஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென்று அதிகரித்தது. எனினும் மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய மைக்கெல் கிளார்க் 22 ஓட்டங்களை எடுத்தபோது இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து 4-வது விக்கெட்டுக்காக ஹைடனுடன் இணைந்த ஹசி சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய ஹைடன் 73-வது பந்தில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணி பல வியூகங்களை வகுத்தபோதும் அதிரடி தொடர்ந்தது. எனினும் அவுஸ்திரேலிய அணி 150 ஓட்டங்களை எடுத்தபோது ஹசி 19 ஓட்டங்களுடன் மிர்ஷாவின் பந்து வீச்சில் ராவிட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.





தொடர்ந்து வோட்ஸன் களமிறங்க மறுமுனையில் அதிரடியாக ஆடிய ஹைடன் 93 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்சர் அடங்கலாக) 77 ஓட்டங்களை எடுத்து ஹர்பஜனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹடின் 4, வோட்ஸன் 9, கிரஜ்ஜா 4, பிரெட் லீ 0 மற்றும் ஜோன்சன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 209 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் வைற் 26 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் மிர்ஷா 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இரு இன்னிங்சிலுமாக 12 விக்கெட்டுக்களை வீழ்த்திய அவுஸ்திரேலிய அணியின் அறிமுக சுழற்பந்து வீச்சாளர் கிரஜ்ஜா தெரிவானதுடன் தொடரின் விருதை தொடரில் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்தியாவின் வெற்றிக்கு வழி அமைத்த வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா பெற்றார். இவருக்குக் கார் ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டது.




### பிடி எடுத்தலிலும் டெண்டுல்கர் சதம்

டெஸ்ட் போட்டியில் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது பிடியை எடுத்தார். நாக்பூரில் நடந்த இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4-வது டெஸ்டின் நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தில் மிஷ்ராவின் பந்து வீச்சில் அவுஸ்திரேலிய வீரர் ஹடின் அடித்த பந்தைப் பிடித்து அவரை ஆட்டமிழப்புச் செய்ததன் மூலம் டெஸ்டில் தனது 100-வது பிடியை எடுத்துள்ளார்.


### தரவரிசையில் இந்திய அணி இரண்டாம் இடம்

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் இந்திய அணி வென்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 7புள்ளிகளை பெற்ற இந்திய அணி 116 புள்ளிகளுடன் தரவரிசைப் பட்டியலில் 2-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 129 புள்ளிகளைப் பெற்றுள்ள அவுஸ்திரேலிய அணி தர வரிசையில் முதல் இடத்திலும் 116 புள்ளிகள் எடுத்திருந்தாலும் டெசிமல் புள்ளியில் பின் தங்கியதால் தொன்னா பிரிக்க அணி 3 ஆம் இடத்திலும்,

இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகள் முறையே 4,5,6,7,8 மற்றும் 9 ஆவது இடத்தில் உள்ளன.

# சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடை கொடுத்தார் கங்குலி




(நாக்பூர்)

கல்கத்தா தாதா, வங்கப்புலி, பிரின்ஸ் ஒவ் கல்கத்தா எனப் பல்வேறு பெயர்களில் செல்லமாக அழைக்கப்படும் இந்திய அணியின் முன்னாள் வெற்றி அணித் தலைவர் சௌரவ் கங்குலி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றார்.

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று நடந்து முடிந்த டெஸ்ட் தொடருடன் கங்குலி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

எனினும் கங்குலி தனது இறுதி இன்னிங்சில் நேற்று முன்தினம் துடுப்பாட்டத்தில் கோல்டன்டக் ஆகி ஆட்டமிழந்தார். இதன் மூலம் கடைசி டெஸ்ட் இன்னிங்சில் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தோர் வரிசையில் 42-வது வீரரானார்.

சர்வதேச அளவில் ஜொலித்த பிரட்மென், லாரா, சோபர்ஸ், கிரஹம் கூச், இம்ரான் கான் மற்றும் ரோம் மூடி எனப் பலரும் தமது கடைசி இன்னிங்சில் டக்-அவுட் ஆகியிருந்தனர்.

1996 ஆம் ஆண்டு லோட்சில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் கங்குலி அறிமுகமானார். அறிமுகமான டெஸ்டின் முதலாவது இன்னிங்சிலேயே 139 ஓட்டங்களை எடுத்து சதம் அடித்து எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தார்.

கங்குலி இதுவரை 113 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 16 சதங்கள் உட்பட 7 ஆயிரத்து 212 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன் 313 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 22 சதங்கள், 72 அரைச் சதங்கள் உட்பட 11 ஆயிரத்து 363 ஓட்டங்களை எடுத்துள்ளார்.



அறிமுகமான டெஸ்டில் சதம் அடித்த மகிழ்ச்சியில்...

# வடக்கு, கிழக்கு பகுதிகளில் சீமெந்தின் தேவை அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் சீமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. அது தொடர்பில் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது என வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தில் பால் மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளபோதும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக்காலை எம்.பிகளுக்கான வாய்மூல கேள்வி நேரத்தின் போது ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் கூறியதாவது,

2007ஆம் ஆண்டு தரவுகளின்படி நாட்டின் ஒரு ஆண்டின் 3.5 மில்லியன் மெற்றிக் தொன் சீமெந்து நுகரப்பட்டுள்ளது. இதில் 1.7 மில்லியன் மெற்றிக்தொன் சீமெந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2.2 மில்லியன் தொன் சீமெந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் அறிக்கையின்படி நாட்டில் நிர்மாணத்துறை 10 வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளது. இதனால் சீமெந்தின் நுகர்வு அதிகரித்துள்ளது.

வடக்கு,கிழக்கு பிரதேசத்தில் சீமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. அது தொடர்பான பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. பால்மா 2007ஆம் ஆண்டு தரவுகளின்படி அந்த ஆண்டு 54 ஆயிரம் மில்லியன் மெற்றிக் தொன் பால்மா நுகரப்பட்டுள்ளது.

அந்த ஆண்டு உள்நாட்டில் 7 ஆயிரத்து 240 மில்லியன் மெற்றிக்தொன் பால்மா உற்பத்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை 60 ஆயிரத்து 2 மில்லியன் மெற்றிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் பால்மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளபோதும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றார். (ச-5)

# இந்தியாவுக்குள் புலிகள் ஊடுருவ முடியாது

## இந்திய கடலோர காவல் படைத் தளபதி தெரிவிப்பு

இந்திய, இலங்கை எல்லையில் கடற்படையினர் கூட்டாக ரோந்து சுற்றி வருவதால் இந்திய எல்லையில் விடுதலைப் புலிகள் ஊடுருவ முடியாது என இந்திய கடலோரக் காவல்படையின் தளபதி ஜெனரல் வைட் அட்மிரல் காண்ட்ராக்டர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம்களை இலங்கை இராணுவத்தினர் தாக்கி போர் உக்கிரமாகி வருவதால் அவர்களிடமிருந்து தப்பிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் இந்திய, இலங்கை கடற்படை கடலோரக் காவற்படையைச் சேர்ந்த வீரர்கள் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளதால் அதற்கு வாய்ப்பு இல்லை என்றார். (ச)

# பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட பெண் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான சிறிரங்கன் சுமதி (வயது 27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பிரஸ்தாப பெண் கிளினிக் ஒன்றிற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் புறப்பட்டதாகவும், அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசி, அவர் அணிந்திருந்த தங்க நகைகள் என்பவற்றைக் காணவில்லை எனவும் அவரது கணவர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்.நீதிவான் ஆர்.வசந்த சேனன் மேற்கொண்டார். (ச-49)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக சூறாவளித் தாக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாக வளிமண்டலவியல்திணைக்களம்நேற்று அறிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையின் பல பகுதிகளில் மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை மட்டக்களப்பில் நேற்று முன்தினம் முதல் தொடர் மழை பெய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# இந்.பிரதமர் மற்றும்...

பாலமாகச் செயற்படுகின்ற பல்தரப்பு தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா நாடுகளின் முன் முயற்சி அமைப்பின் இரண்டாவது உச்சி மாநாடே இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுத்தத்தை நிறுத்தக் கோரி தமிழகத்தில் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் தருணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா சென்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் பாரிய எதிர்பார்ப்பொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினூடாக தீர்வொன்று முன் வைக்கப்படுமென இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறியிருந்தார். (எ-5)

# மகிந்த...

எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இரகசிய உளவுப் படைப்பிரிவொன்றை உருவாக்கி மக்களின் ஜனநாயக உரிமைகளை பறித்துக் கொள்ளும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் நடந்து கொள்வதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# கலைஞர் கருணாநிதியின்...

கூறுகிறார்கள்.

ஒரு காலத்தில் அந்த கட்சியில் நானும் இருந்துள்ளேன் என்பதை தற்போது நினைக்கும் போது வெட்கமாக உள்ளது. மனித நேயம், உறுதியான செயல்பாடு, தெளிவான சிந்தனை இல்லாதவர்கள் இந்திய ஆட்சி பீடத்தில் உள்ளனர்.

இன படுகொலையை உலக நாடுகளே கண்டிக்கிறது. ஆனால் இந்தியா வேடிக்கை பார்கின்றது. முதல்வர் பங்கேற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் பல்வேறு சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பினர். அதற்கு இதுவரை கருணாநிதி உரிய பதில் அளிக்கவில்லை.

தி.மு.க எம்.எல்.ஏ, எம்.பிக்கள் இராஜினாமா கடிதத்தை டெல்லிக்கு அனுப்பி இருந்தால் அதைப்பின்பற்றி தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் செய்திருப்பர்.

முதல்வர் கருணாநிதி நடத்தும் நாடகத்திற்கு மற்றக் கட்சிகள் உதவி செய்யவில்லை என்பதால் அவர் எது வேண்டும் என்றாலும் பேசக்கூடாது. இலங்கை தமிழர்களுக்கு எதிரான கருணாநிதியின் தவறுகளை வரலாறு மன்னிக்காது என்றார் நெடுமாறன். (ச-5)

# இந்தியப் பிரதமர்...

நிறுத்திவிட முடியும். இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் உட்கார்ந்து பேசி அரசியல் தீர்வு காண்பதுக்கு இந்திய அரசு முயற்சிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும் எனபிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

அதேபோல், இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது என்று ஆழ்ந்த நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஒன்றுபட்ட இலங்கையின் சட்டதிட்டத்தின்படி தமிழ்ச் சமுதாயம் உள்ளடக்கிய சிறுபான்மையினரின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கருத்தை வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் 22 ஆம் திகதி கூறியுள்ளார்.

இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என வலியுறுத்தியே தமிழக அரசின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரின் கருத்துக்கள் அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளன.

அந்தக் கருத்துக்களை நடைமுறைப் படுத்தக் கூடிய, தவிர்க்க முடியாத பொறுப்பும், கடமையும் இலங்கை அரசுக்கு உள்ளது. அதனை இந்திய அரசு, இலங்கை அரசுக்கு உணர்த்தி செயல்படச் செய்வது அவசர, அவசியத் தேவையாகும். (ச-5)

# வன்முறைகள் இடம்பெறாத...

நிபந்தனையை ஏற்றுக்கொள்ளமுடியாது என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

நாம் எப்பொழுதும் போர்நிறுத்தம் தேவையென்றே கூறிவருகிறோம். இதில் எமக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லையென விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூறினார்.

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தம் என்ற பேரில் வன்முறைகளில் ஈடுபட்ட அனுபவங்கள் கடந்த காலத்தில் நிறையவே இருந்ததால் கிழக்கு மக்களை மீட்டதைப் போன்று வடக்கு மக்களையும் மீட்பதற்கு மனிதநேய நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எமது மனிதநேய நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்க முன்னர், விடுதலைப் புலிகள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொல்ல முயற்சி செய்ததுடன், பல இராணுவ அதிகாரிகளைக் கொலை செய்துள்ளனர் என்றார் ஹெகலிய ரம்புக்வெல.

வன்முறைகள் இடம்பெறாத நிலையையே போர்நிறுத்தம் என்று அழைப்போம் என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 30 வருட காலத்தில் விடுதலைப் புலிகளின் பல்வேறு போர்நிறுத்தங்கள் மூலம் போதுமானளவு பாடங்களைக் கற்றிருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் சதிக்குள் சிக்காமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் செயற்படுமெனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (ச-5)

# யுத்த நிறுத்தத்துக்கு இடமில்லை...

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் கூடியது.

தினப்பணிகள் முடிபடைந்ததும் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதம் ஆரம்பமானது. இதில் அரசாங்கத்தின் சார்பாக விவாதத்தில் கலந்து கொண்டு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார்.

அப்போது குறுக்கிட்ட ஜே.வி.பியின் எம்.பியான ரணவீர பத்திரன, புலிகள் யுத்த நிறுத்தத்துக்கு தயாராக இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மைத்திரிபால மேற்கண்டவாறு தெரிவித்தார். புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும்வரையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குச் செல்லாது என ஜனாதிபதி தெளிவாக கூறியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து பேசியதாவது,

ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பேற்று 3 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் நாடு பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டுக்கும் தேசிய பாதுகாப்பு முக்கியமானதாகும். இத்துறையின் ஒரு தொய்வு, தளர்வு ஏற்பட்டு பாதுகாப்பற்ற நிலை காணப்படுமாயின் அது முழு நாட்டையும் சகல துறைகளையும் பாதிக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் தேசிய பாதுகாப்பு பாதிப்புக்குள்ளான நிலையில் இருந்தபோதே ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பேற்றார்.

ஜனாதிபதி தனது துணிச்சல் மிக்க நடவடிக்கையால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார். கிழக்கு மாகாணத்தை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டு அங்கு ஜனநாயகத்தை நிலைநிறுத்தினார்.

தற்போது வடக்கிலும் இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மேல்மாகாண சபை, மொறக்காகந்த மின் உற்பத்தி திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று மதுவை ஒழிப்பதிலும் மகிந்த சிந்தனையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் வேலை இல்லாதவர்களின் வீதம் 6 வீதமாக குறைவடைந்துள்ளது.

விவசாயம் 7 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. மொத்தப்பொருளாதாரம் 6 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பொருளாதார நெருக்கடி , உணவுப் பற்றாக்குறை போன்ற சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாம் அரச சொத்துக்களை விற்காமல் வெளிநாடுகளில் தங்கியிருக்காமல் சொந்தக் காலில் நிற்க முயற்சிப்பதற்கு வலுச் சேர்க்கும் வகையில் வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளது.

இது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் தொனிப்பொருளை கொண்டதாக உள்ளதால் அது எதிர்க்கட்சியினரை விசனமடையச் செய்துள்ளது.

1977 முதல் 2005 வரை ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் அரச சொத்துக்களை விற்று துண்டுவிழும் தொகையை பெறுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த 3 வருடத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சமர்ப்பித்துள்ள நான்கு வரவு செலவுத் திட்டத்திலும் செலவுகளை ஈடுசெய்ய நாம் அரச சொத்துக்களை விற்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றார். (ச-5)

# பூநகரியை...

இறுதித் தடையையும் தாண்டி இராணுவத்தினர் சென்றிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை செம்பன்காடு முதல் நீவில் வரையான 18 கிலோ மீற்றர் பகுதியை இராணுவத்தினர் கைபற்றியதாகவும். எனினும், ப்தில் தாக்குதல்களால் மிகவும் மெதுவாகவே இராணுவத்தினரின் முன்நகர்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

583ஆவது படைப்பிரிவினர் செம்பன்காடு பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.10 மணியளவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதி மீது தாக்குதல் நடத்தியிருந்ததாகவும், சில இராணுவத்தினர் உயிரிழந்ததுடன், சிலர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இராணுவத்தினரின் முதலாவது விசேட படையணி கிளிநொச்சி மாவட்டம் கிராஞ்சி பகுதியை முழுமையாக விடுவித்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. சில மணி நேரம் இடம்பெற்ற கடுமையான சமரைத் தொடர்ந்து அந்தப் பகுதியை மீட்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பில் கூறப்படுகிறது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.